Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்




தொகுப்பு 9 தொகுதி 1 ஜனவரி - ஜூன் 2019

R 5401

## “யோபுவின் அனுபவங்கள் மனித வரலாற்றின் நிழல்”

## “JOB’S EXPERIENCES TYPICAL OF HUMAN HISTORY”

யோபுவின் புஸ்தகமானது எபிரேய மொழியின் மிகவும் அருமையான இலக்கிய நடையின் வரவாகும். இது ஒரு கவிதை நடையாகும். இப்புத்தகத்தின் எந்த ஒரு மொழிபெயர்ப்பும் நியாயமான முறையில் அடையவில்லை என எல்லா அறிஞர்களும் ஒத்துக்கொள்கிறார்கள். மார்ட்டின் லூதரும்கூட அவருடைய கடைசி முயற்சியாக இப்புத்தகத்தை ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்து அதை சரிபார்க்கும்போது என்ன கூறினாரென்றால், “யோபு தன்னுடைய நண்பர்களால் இகழப்பட்டதினால் ஏற்பட்ட துன்பத்தைவிட என்னுடைய மொழிபெயர்ப்பினால்அதிகம் துன்பப்பட்டிருப்பார். மேலும் அவருடைய புலம்பலை கொட்டும் எருக்களமாக என்னுடைய மொழிபெயர்ப்பை எண்ணியிருப்பார்” என்று கூறினார். “இலக்கிய உலகிலேயே இப்புத்தகம் மதரீதியான மிக உயர்ந்த கவிதை என எதிர்ப்பே இல்லாத அளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது” என சாமுயேல் காக்ஸ் கூறுகிறார். தாமஸ் தாரைலே என்பவர் கூறும்போது, பேனாவினால் எழுதப்பட்ட சிறந்த புத்தகங்களில் ஒன்றாக இப்புத்தகம் உள்ளது என்றும், வேதத்திலோ அல்லது அதற்கு வெளியிலோ இதற்கு இணையான இலக்கிய சிறப்பு ஒருபோதும் எழுதப்படவில்லை என்கிறார்.

இதை எழுத தேவன் எந்த எழுத்தாளரை பயன்படுத்தியிருந்தாலும், அவருடைய பெயர் தரப்படவில்லை. இப்புத்தகம் யோபுவினுடைய இழப்புக்கள் மற்றும் துன்பங்களோடு கூடிய சிறிய உரைநடையில் ஆரம்பிக்கிறது. (இங்கு யோபு சம்பந்தமாக சாத்தான் தேவனோடு பேசுவதுபோல் உள்ளது உருவகக்கதை பாஷையில் எழுதப்பட்டுள்ளதை கண்டிப்பாக சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்). பின் அவருடைய நீடிய பொறுமை காட்டப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து, யோபு மற்றும் அவருடைய மூன்று நண்பர்களின் பேச்சுபாணியிலான கவிதை உரையாடல், பின் எலிகூவின் விவாதம், அதன்பின் சர்வவல்லவருடைய உரை, பின் யோபு தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல் என பதிவுசெய்யப்பட்டுள்ளது. முடிவுரையானது, யோபு ஆசீர்வாதம் மற்றும் ஆதரவை திரும்பப் பெற்றுக்கொள்வதும், பின் அவருடைய மரணசெய்தியும் தரப்பட்டுள்ளது.

சிலர் யோபுவின் புத்தகத்தை வெறுமனே ஒரு உவமை என்றும், யோபு ஒரு கற்பனை கதாபாத்திரம் எனவும் எண்ணுகின்றனர். ஆனால் இதுபோன்று இருந்தால் இப்புத்தகத்தின் போதனைகளும் வித்தியாசமானதாக இருக்காது. ஆனபொழுதிலும், அம்மாதிரியான நபர் வாழ்ந்துள்ளார் எனவும், அநேக அனுபவங்களுக்குள்ளாக சென்றார் என்றும் நாம் சந்தேகத்திற்கிடமின்றி நம்பலாம். எசேக்கியேல் 14:14இலும் யாக்கோபு 5:11இலும், மற்ற பரிசுத்தமனிதர்களோடு யோபுவும் பேசப்படுவதால் இப்புத்தகம் ஒரு உவமையாக இருக்க வாய்ப்பில்லை. அதுமாத்திரமல்ல, அதில் தரப்பட்டுள்ள சில குறிப்பிட்ட விபரங்கள், பொதுவாக உவமையில் வருவதுபோல் இல்லை.

உண்மை என்னவெனில், பலவித இன்னல்களுக்குப் பின்பு யோபு 140 வருடங்கள் உயிர்வாழ்ந்தார், அல்லது மொத்தமாக 200 வருடங்கள் வாழ்ந்திருக்கக்கூடும். இதோடுகூட அவரோ அல்லது

### இம்மாத வெளியீட்டில்

| | பக்கம் |
|---|---|
| .... யோபுவின் அனுபவங்கள் மனித வரலாற்றின் நிழல் ... | 1 |
| .... இராஜ்ஜியத்தின் உவமைகள் ... | 8 |
| .... வேறு எதை யேகோவா உன்னிடம் கேட்கிறார்? ... | 11 |
| ... இந்த யுகத்தின் முடிவு ஒரு ஆபத்துக்காலம் ... | 9 |

*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

Email- indianbiblestudents@gmail.com

அவருடைய நண்பர்களோ இஸ்ரயேல் சம்பந்தமாகவோ, மோசே அல்லது நியாயப்பிரமாணம் சம்பந்தமாகவோ அல்லது ஆபிரகாம் மற்றும் தேவன் அவருடன் செய்த உடன்படிக்கை சம்பந்தமாகவோ எதுவும் குறிப்பாக கூறவில்லையாதலால், சந்தேகத்திற்கிடமின்றி அவர் முற்பிதாக்கள் யுகத்தை சேர்ந்தவராக இருந்தார். மேலும் அவர் ஆபிரகாம் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருக்க வாய்ப்புள்ளது. அவர் அரேபியா தேசத்தில் குடியிருந்திருப்பாரானாலும் பாலஸ்தீனாவிலிருந்து அத்தேசம் வெகுதூரத்தில் இல்லை.

யோபு நன்கு படித்தவராகவும் செல்வாக்கு மிக்கவராகவும் அறிமுகப்படுத்தப்படுகிறார். மேலும் பயபக்தியுள்ளவராகவும், தேவனை அறிந்தவராகவும் நீதியை நேசிப்பவராயும் இருந்தார். பெருந்தன்மையுடையவராக, விதவைகளையும், அநாதைகளையும் ஆதரித்தார். அதேசமயம் மிகப்பெரிய வியாபாரியாகவும், செல்வந்தனாகவும் இருந்தார். அவருடைய அதிக எண்ணிக்கையிலான வேலைக்காரர்களினாலும், 3000 ஒட்டகங்களினாலும் வளமான பாதையில் அவருடைய வியாபாரம் பெருகினது.

ஆனால் சடுதியாக ஒரு பேரிடர் வந்து அவருடைய குழந்தைகள், அவருடைய செல்வம், அவரது செல்வாக்கு மற்றும் அவருடைய உடல்நலம் முற்றிலும் அழிந்தது. ஏன் இப்படிப்பட்ட தீமைகள் தன்மேல் வந்தது என்பதற்கான காரணங்களை அறிய முற்பட்டும் விடை காணாதவராக இருந்தார். ஆனாலும் தேவன்மேல் நம்பிக்கையுள்ளவராக இருந்து, அவர் என்னை கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்'' என்றார். அவருடைய மனைவி அவரிடம் ; தேவனுடைய அங்கீகாரம் இல்லாமல் இன்னும் நீதியை செய்யவும், வாழ்நாள் முழுவதும் இரக்கமுள்ளவராகவும் இருக்கவும் விரும்புவதை விட்டுவிட்டு, ''தேவனை தூஷித்து ஜீவனை விடும்'' என்றாள்.

அவரைப் பார்க்க வந்த மூன்று நண்பர்களும் இதே விதமான பார்வையுடையோராய், நீண்ட விவாதத்தின் மூலம் யோபு ஒரு மகாபாவியாகவும், மாய்மாலக்கரராகவும் இருக்கவேண்டும்'' என்றனர். ஆனால் தேவனுக்கு முன்பாக அவருடைய நேர்மையான மனசாட்சியினிமித்தம் யோபு தன்னுடைய குற்றமற்ற தன்மையை உச்சபட்சமாக எடுத்துரைத்தாலும், தன்னிடத்தில் குற்றங்காண்போர் முன்பாக அமைதலாயிருந்தார். தன் சார்பாக யாராவது ஒருவர் தேவனிடம் தன்நிலையை எடுத்துரைத்தால் நலமாயிருக்கும் என உணர்ந்தார். எவ்விதமாக நீதிமானாக இருக்கவேண்டும் என தான் அறிந்திருந்த அளவு ஜீவிப்பதாக கதறினார். தேவஞானம் மற்றும் வல்லமையை விட தன்னுடைய ஞானம் மிகமிக குறைவானதாக உள்ளதை உணர்ந்திருந்ததால், இது குறித்து தேவனிடம் வாதாட முடியாதிருந்தது. மேலும் மனப்பூர்வமான துன்மார்க்கர் எவ்வளவேனும் மனக்கலக்கம் கொண்டிருப்பதில்லை எனவும் எடுத்துரைத்தார். ஆனால் நீதிக்காக நிற்கும் தன்னுடைய வாழ்க்கையில் இன்னல்கள் ஏற்படுவதோடுகூட, எவ்வித மகிழ்ச்சியும் இல்லை, தான் பிறவாதிருந்தால் நலமாயிருந்திருக்கும் என்றார்(அதிகாரம் 9,10 மற்றும் 16). மாபெரும் தேவனாகிய யேகோவாவிடம் எடுத்துரைக்க இயலாத தன் நிலையைக்குறித்து தேவனுக்கும் தனக்கும் மத்தியில் ஒரு மத்தியஸ்தராகிய நடுவர் இருந்தால் நலம் என விரும்பினார் – அதிகாரம் 9:33; 16:21.

தன் நண்பர்களுடைய தவறான காரணங்களுக்கான யோபின் தேர்ச்சிவாய்ந்த பதில்களும் (முறையற்ற அநேக காரணங்கள் ஏவப்பட்டு எழுதப்பட்டன என குறிப்பிடப்பட்டுள்ளது) தேவன்பேரில் கொண்டிருந்த அவருடைய உறுதியான நம்பிக்கை பற்றிய அவருடைய வெளிப்பாடுகள், அதைத்தொடர்ந்து அவருடைய இறுதி விடுதலையும் அதிகாரம்13:1–16ல் தெளிவாக தரப்பட்டுள்ளது. பின் 14ம் அதிகாரத்தில் தீர்க்கதரிசன ஞானத்தோடு மனுக்குலத்துடனான தேவனுடைய தொடர்பு பற்றி மிகவும் அருமையான முறையில் தீர்க்கதரிசன ஞானத்தில் தரப்பட்டுள்ளது.

**யுகங்களின் பிரச்சனைகள்**

யோபுவுக்கு குழப்பத்தை வருவித்த அந்தக் கேள்வியும், அவருடைய குழப்பமான பகுத்தாராய்தலும், அநேக நூற்றாண்டுகளாக மற்ற தேவனுடைய ஜனங்களுக்கும் அதே விதமாக இருந்து வருகிறது. ஏன் தேவன் தம்முடைய உண்மையான ஊழியர்களின்மேல் தீமையை(இடர்ப்பாடுகள் மற்றும் துன்பங்கள் முதலியன) அனுமதிக்கிறார் ? ஆனால் சுவிசேஷயுகம் வரையிலும் இது சம்பந்தமாக தேவனுடைய சிந்தையை புரிந்துகொள்ள யாருக்கும் வாய்ப்பில்லை. ஏனெனில் இது தேவனுடைய ஆவியினால் வெளிப்படுத்தப்படுவதாக, ஒரு ஆழமான காரியங்களில் ஒன்றாக உள்ளது. மேலும் அப்.பவுல் விளக்குவதுபோல, அந்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கே வெளிப்படுத்தப்படும் (1கொரிந் 2:9–14). மேலும் கிறிஸ்து நம்மை மீட்டு, நாம் மீண்டும் தெய்வீக ஆதரவையும், சமாதானத்தையும், ஐக்கியத்தையும் திரும்பப் பெறவேண்டி, தம்முடைய பலியின் விலைக்கிரயத்தை ஒப்படைப்பதற்காக உன்னதத்திற்கு ஏறும்வரையில், அந்த பரிசுத்தஆவி தரப்படவில்லை. ஏனெனில் அதுவே நம் வழிகாட்டியாகவும், போதகராகவும் இருக்கிறது.

இந்த விஷயத்தைப் பொறுத்தளவு அநேகர் இன்னும் இருளில் இருந்தாலும், ஆர்வமுள்ள ஜனங்களுக்கு இந்த "பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களையும்(மத்13:11), "தேவனுடைய ஆழமான காரியங்களை" அறியும்படிக்கு, இவ்விஷயங்கள் திறக்கப்பட்டு தெளிவாக அருளப்பட்டிருக்கிறது(1கொரிந்2:16). இவர்கள் தீமையின் ஆளுகையும், இவ்வுலகின் அதிபதியாகிய சாத்தானின் கீழுள்ள பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையும் இரு காரணங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளது என காண்பர்; முதலாவதாக, பாவத்தின் உச்சகட்ட முழு அனுபவத்தையும் அதன் கசப்பையும், பின் அதன் பலனையும் எல்லா மனிதரும் பெறவேண்டும், இரண்டாவதாக, தேவனுடைய ஜனங்கள் உபத்திரவம் மற்றும் சோதனைகளின் மூலமும், அதேசமயம் சிறந்த உடல்நலம், வளமான வாழ்க்கையின் மூலமும் தேவன் முன்பாக உண்மையுள்ளவர்களா என முழுமையாக பரிசோதிக்கப்படுவார்கள்.

இப்படியாக, தேவன் நம்மை சுற்றிலும் உள்ள இயற்கையிலும், மனிதரிடத்திலும் உள்ள தீமையின் நிலையை நேரடியாக நம்மில் உண்டாக்காதபடி, கீழ்ப்படியாமையினால் வரும் நியாயமான பலனை அல்லது விளைவை உண்டாக்கும்படி செய்யப்பட்டுள்ளது. அவர் மனிதருடைய கோபத்தையும், பாவத்தையும் மற்றும் சாத்தானுடைய பகைமையையும் பயன்படுத்தி, தம்முடைய மகத்துவமான காரியங்களை வடிவமைக்கிறார். இதை அநேகர் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், வெளியாக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையின்மேல் உள்ள விசுவாசத்தினால் தம்முடைய பிள்ளைகள் அறிந்துகொள்வர். உதாரணமாக தேவஆட்டுக்குட்டியை அவமதித்து, கேலிசெய்து, சிலுவையில் அறையும்போது, சாத்தானும், பொறாமைகொண்ட யூத ஆசாரியர்களும், பரிசேயரும், இருதயமற்ற ரோம சிப்பாய்களும் தேவதிட்டம் நிறைவேற தாங்கள் உதவுகிறோம் என குறைந்த அளவாவது அறிந்திருப்பார்களா!

அவ்வாறே தேவனுடைய பிள்ளைகளுக்கும், குறிப்பாக கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சிறுமந்தை வகுப்பாருக்கு அநேக உபத்திரவங்கள் இருக்கும். அவர்கள் வருங்காலத்தில் மாபெரும் அளவில் பயன்படுத்தப்படுவதற்கும், தேவதிட்டத்தின் எதிர்கால வளர்ச்சியில் கனமடைவதற்காகவும், இவர்கள் தகுதியடைவதற்காகவும், பளபளப்பாக்கவும் சோதனை வடிவமைக்கப்படுகிறது. இவ்விதமாக துணிகரமான மற்றும் அறியாமையினால் துன்புறுத்துகிறவர்கள்மேல் கவனம் செலுத்தாமல், இந்த விசுவாசத்திற்கும் பொறுமைக்குமான பரீட்சையானது "நித்திய கன மகிமையை" அளிக்கிறது. இந்த உபத்திரவங்கள் அவர்களுக்கு பொறுமை, அனுபவம், சகோதர இரக்கம், தேவசாயலான அன்பு இவைகளை பெறவும், அழைக்கப்பட்டவர்களான இவர்களை மகிமையின் வாரிசுகளாகவும் தயார்ப்படுத்துகிறது. இப்படிப்பட்ட தேவனுடைய பிள்ளைகளே உபத்திரவங்களிலும் களிகூர்ந்து எல்லாவற்றையும் நன்கு உணர்ந்துகொள்வர் – அதாவது, நன்மை மற்றும் தீமை பற்றியும், சாதகமற்ற மற்றும் சாதகமான எல்லாவற்றின்மேலும் தேவனுடைய மேற்பார்வை இருந்து, இறுதி நன்மையை தரும் என அறிந்திருப்பர்.

**உயிர்த்தெழுதல் மீதான யோபுவின் நம்பிக்கை**

நாம் மறுபடியும் யோபுவைப்பற்றி ஆராயும்போது, அதிகாரம் 14இல், அவருடைய தீர்க்கதரிசன ஞானத்தை உற்று நோக்குவோமாக. முதல் நான்கு வசனங்கள் – மனித வாழ்க்கையானது தற்கால சூழ்நிலையில் தொட்டில் முதல் கல்லறைவரை முற்றிலும் துன்பங்களாலும் சோதனைகளாலும் நிறைந்துள்ளதை படம்பிடித்துக் காட்டினாற்போல் உள்ளது. விழுந்துபோன வம்சாவழியில் தானும் இருப்பதை உணர்ந்தவராக, தான் பரிபூரணராகவோ பாவத்துக்கு விலகினவராகவோ, சுத்தமுள்ளவராகவோ இருக்கமுடியாது என்பதை யோபு காண்பிக்கிறார்.

வசனம் 5,6 இல் அவர் கர்த்தரிடத்தில் கூறும்போது மனிதனுடைய நாட்களை கட்டுப்படுத்தும் அதிகாரமும் வல்லமையும் அவரிடமே உள்ளது என்பதை தாம் உணர்வதாக கூறுகிறார்(உபத்திரவ ஊழியத்தை உணராதவராக). தேவன் தன்னையும் மற்ற எல்லா மனிதரையும், அவர்களுடைய கொஞ்ச கால வாழ்க்கையை சமாதானமாக இருக்கவிடவில்லை என கேட்கிறார். எவ்வாறெனில் ஏற்கனவே பாரமான சுமையில் உள்ள கூலியாளைக்கூட நாங்கள் தொந்தரவு செய்யாததுபோல தங்களையும் விடலாமல்லவா ? என்கிறார்.

வசனம் 7–19இல், மனிதனுடைய எந்தவொரு வல்லமையைப் பொருத்தவரையில், மரணத்தில் அவனுடைய அப்பட்டமான நம்பிக்கையின்மையை யோபு கூர்ந்து அறிந்திருக்கிறார். ஒரு மரம் செத்தாலும் அதின் அடிவேர் ஜீவனைத் தக்கவைத்து சாதகமான சில சூழ்நிலைகளில் மீண்டும் வேறொரு மரமாக துளிர்த்துவரும். ஆனால் மனிதன் மரிக்கும்போதோ எந்த அடிவேரோ இல்லாதவராக ஜீவனுக்கான ஒரு பொறிகூட இல்லாதவனாகிறான். அவன் தன் ஜீவஆவியை விட்டபின் அவன் எங்கே ?

இவ்வாறாக மனிதனுள் எந்தவொரு நம்பிக்கையின் அடிப்படை இல்லாததை ஒப்புக்கொண்டவராக, வசனம் 12–

13இல், மனுக்குலத்திற்கான ஒரே நிச்சயமான நம்பிக்கையாக உயிர்த்தெழுதல் உண்டு என யோபு விவரிக்க ஆரம்பிக்கிறார். மனிதன் மரணத்தில் படுத்துக்கிடக்கிறான். தன்னையே உயிர்த்தெழுப்புவதற்கு தன் எல்லா வல்லமையும் இழந்துவிடுகிறான். தேவனுடைய ஏற்றகாலம் வரும்வரை மரண நித்திரையிலிருந்து யாராலும் அவனுக்கு புத்துயிர் கொடுக்க முடியாது. தேவனுடைய ஏற்ற காலம் என்பது ஆயிரமாண்டு நாளாகிய உயிர்த்தெழுதலின் காலைப்பொழுதாகும். அச்சமயத்தில் தற்கால அடையாள அர்த்தங்கொண்ட வானங்கள் அகற்றப்பட்டு, புதிய வானங்கள் அல்லது புதிய ஆவிக்குரிய ஆளும் வல்லமையாகிய கிறிஸ்துவின் இராஜ்யம் இருக்கும். அந்த இராஜ்யம் முழு உலகத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டுவரும். இவ்விஷயத்தில் யோபு, நம் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலருடைய போதனைகளுக்கு முற்றிலும் ஒத்துப்போகிறார்.

தீமை ஆளுகை செய்யாத அந்த ஆசீர்வாதமான காலத்தைப் பற்றி அவர் அதிகமாக சிந்தித்து, ராஜா நீதியாக ஆளுகை செய்து, பிரபுக்கள் நீதியாக தீர்ப்புசெய்யும்வரை, தான் மரண இளைப்பாறுதலில் இருக்கவே விரும்புகிறார்.“நீர் என்னை பாதாளத்தில் ஒளித்து உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து, என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்” என வசனம் 13இல் உணர்ச்சி பொங்குகிறார். யோபு உயிர்த்தெழுதலில் நம்பிக்கையுள்ளவராக இருந்தார். இல்லையெனில் பாதாளத்தில் ஒளித்து வைக்கப்படும் மரணத்திற்காக ஒருக்காலும் ஜெபித்திருக்கமாட்டார். ஆனால் விடியற்காலம்வரை இளைப்பாறுவதற்கு விரும்பினார் (வசனம் 12). அதாவது, மரணத்தை விரும்பினார். அதுவும் இனிமேல் பாவத்தோடும் தேவ கோபமாகிய தீமையோடும் கூடுதலான எந்த அனுபவமும் பெறாமலிருக்கும் ஒரே காரணத்திற்காகவே மரணத்தை விரும்பினார்.

சுவிசேஷயுகத்தின் முடிவின் கொஞ்சகாலமானது, “கோபாக்கினையின் நாள்” என்றும், “தேவனுடைய நீதியான தீர்ப்பு வெளிப்படும் நாள்” என்றும் விசேஷமாக அழைக்கப்படுகிறது. ஏனெனில் “இதுவரை சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாததுமான மகா உபத்திரவக் காலமாக” அது அழைக்கப்படும். ஆனபோதிலும் ஆதாமின் வீழ்ச்சி துவங்கி முழு காலப்பகுதியும் தெய்வீக கோபாக்கினையின் நாளாக இருக்கிறது. அது சரியானதாகவும் உள்ளது. இந்த நீண்ட காலப்பகுதியில் பல்வேறு வகையில் எல்லா அநீதிக்கும் எதிராக தேவகோபாக்கினை வெளிப்பட்டிருக்கிறது. அதேவேளையில், அன்பானது தெய்வீக அரசாங்கத்தில் ஆளும் கொள்கையாக உள்ளது. மேலும் அது நீதிக்கும் ஞானத்திற்கும் இசைவாக மட்டுமே செயல்படமுடியும். மனப்பூர்வமான மீறுதலினால் வந்த மரணத்தின் நிஜமான பாரம் பற்றி மனிதனை உணரவைப்பது நீதியும் ஞானமுமாக இருக்கும். அதேசமயம், அன்பானது மீட்கும்பொருளையும் உயிர்த்தெழுதலையும் ஏற்றவேளையில் ஏற்பாடு செய்திருப்பதையும் உணரவைப்பதும் நீதியும் ஞானமுமாக இருக்கும். இதினிமித்தம் குற்றவாளியானவன், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் திரும்பக் கொடுத்தலின் கால ஆசீர்வாதங்களையும், நித்திய ஜீவனையும் மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வான். அவ்வகையில் குற்றமுள்ள சந்ததியார்மேல் அனுமதிக்கப்பட்டுள்ள மரணமும் எல்லாத் தீமைகளும் தேவ கோபாக்கினையின் வெளிப்பாடுகளாக இருப்பதோடு, அக்கோபாக்கினையானது மகா உபத்திரவத்தின் காலத்தில் இன்னும் கூடுதலாக வெளிப்படும். அதைத் தொடர்ந்து 1000 வருட அரசாட்சியில் தேவனுடைய அன்பும், கிறிஸ்து மற்றும் மகிமையடைந்த சபையின் ஆதரவும், முழுமையான மற்றும் தெளிவான வெளிப்பாடுகளோடு இருக்கும் – ரோமர் 1:18.

14 மற்றும் 15ம் வசனங்களில் அவருடைய விசுவாசத்தைத் தீர்மானித்து முடிவெடுக்கும்படி குறிப்பான கேள்வி எழுப்பினாலும், உடனடியாக உறுதியான பதிலையும் தருகிறார். “என்னைக் கூப்பிடும்,(ஆதாமின் மரணத்திலிருந்து எழுந்தபின்– யோவா5:28,29) அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன் உமது கைகளின் கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக” அதாவது மனிதர்கள் அவருடைய கரத்தின் கிரியையாக கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்படுவார்கள் – எபேசி2:10).

**ஒரு மீட்பரின் மீதான எலிகூவின் நம்பிக்கை** (ELIHU'S HOPE OF A REDEEMER)

யோபு தன் மூன்று நண்பர்களுடைய விவாதங்களை நிராகரித்தாலும், எலிகூ (இப்பெயர் தேவனையே அடையாளப்படுத்தும்) வித்தியாசமான கோணத்தில் பேசி, யோபுவையும் மூன்று நண்பர்களையும் கடிந்துகொள்கிறார். யோபு ஒருவகையில் தவறான அநுமானத்தில் காரியங்களை அறிய முற்படுகிறார் என எலிகூ எடுத்துக் காண்பிக்கிறார். எப்படியெனில், உன்னதத்தில் இருப்பவருடைய எல்லா வழிகளையும் முற்றிலும் புரிந்துகொள்ள எதிர்பார்க்கக்கூடாது எனவும், மாறாக, தேவநீதியிலும் அவருடைய ஞானத்தின்மேலும் நம்பிக்கையுடையவராக இருக்கவேண்டும் எனவும் எடுத்துக் காண்பிக்கிறார்.

மேலும் யோபு 33:23,24இல் அவர், மரணத்தின் வல்லமையிலிருந்து மனிதன் மீட்படையவும், தெய்வீக ஆதரவில் புதுப்பிக்கப்படவும் ஒரு விஷயம் தேவை என காண்பிக்கிறார். “ஆயிரத்தில் ஒருவராகிய (அபூர்வமானவர்) சாமாசி பண்ணுகிற(defender) தூதனானவர் மனுஷனுக்குத்

தம்முடைய நிதானத்தை அறிவிக்கும்படிக்கு , அவனுக்கு அநுசாரியாயிருந்தாரேயாகில், அவர் அவனுக்கு இரங்கி, அவன் படுகுழியில் இறங்காதபடிக்கு நீர் அவனை இரட்சியும் , மீட்கும்பொருளை நான் கண்டுபிடித்தேன் என்பார்''

இதுவே மனிதனுடைய விஷயத்தில் உண்மையானதாகும். தேவனுடைய ஞானத்தையும் அவருடைய நீதியையும் ஒருபோதும் தவறாக்க முடியாது. ஆதாமின் மூலமாக அனைத்து மனிதர்மேலும் வந்த மரணத்தீர்ப்பு நீதியான தீர்ப்பாகும். (ரோமர்5:12). ஆனால் தேவன் நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னும் மீட்பரை நமக்கு வழங்கியிருக்கிறார். மேலும் இயேசுவானவர் தேவதிட்டத்திற்கு இசைவாக செயல்பட்டு, மனிதனாகி, ஆதாமின்மேல் உள்ள மரணத்தீர்ப்புக்காக தம்மையே மீட்கும்பொருளாக எல்லாருக்காகவும் ஒப்புக்கொடுத்தார். சரீரம் என்றும் ஆலயம் என்றும் அழைக்கப்படும் மணவாட்டி வகுப்பார் நிறைவடைந்தவுடன், இந்த மாபெரும் மத்தியஸ்தர், யாரெல்லாம் அவருடைய நீதியை ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு கடைப்பிடிக்கும் பொருட்டு தம்முடைய நீதியை அறிவிக்க முன்வருவார்.

வசனம் 25 மற்றும் 26இல், அதைத் தொடர்ந்து வரும் மறுசீரமைத்தல் பற்றிய காட்சி கொடுக்கப்பட்டுள்ளது. உடல்ரீதியாக மத்தியஸ்தர் இவர்களுக்காக நிற்கிறபடியால், என்றும் மாறாதபடி நிலையான வாலிப வயதை மீண்டும் இவர்கள் பெறுவர். மேலும் இதனால் அழிவும் மரணமும் இல்லாமற்போகும். அவர்கள் தேவனை ஏற்றுக்கொண்டு அவரோடு ஐக்கியப்பட்டு மகிழ்ச்சியும் சமாதானத்தையும் அடைவர். மேலும் ஏதேனில் பாவத்தினால் இழந்துபோன ஆதி பரிபூரணத்தை அவர் அவர்களுக்கு திரும்ப அளிப்பார். ஆனாலும் தேவன் நீதியுள்ளவர் என்பதையும், மேலும் திரும்பக் கொடுத்தலை இலவசமாக பெறுதல் அவசியம் என்பதையும் அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். வசனம் 33:27,28 இல் இதைப்பற்றி கூறப்பட்டுள்ளது.

''அவன் மனுஷரை நோக்கிப் பார்த்து, நான் பாவஞ்செய்து செம்மையானதைப் புரட்டினேன், அது எனக்குப் பிரயோஜனமாயிருக்கவில்லை. என் ஆத்துமா படுகுழியில் இறங்காதபடி அவர் அதை இரட்சிப்பார்; ஆகையால் என் பிராணன் வெளிச்சத்தைக் காணும் என்று சொல்லுவான்''.

யோபுவை தேற்றினவர்கள் பேசின ஞானமுள்ள வார்த்தைகளைக் காட்டிலும் எலிகூவின் வார்த்தைகள் மிகவும் ஞானமாக இருந்தது. ஆனால் நாம் அறிந்தவரை அவைகள் வெறுமனே மனித ஞானமாக இருக்கிறது. (யோபு 34:30 தமிழில்). ''அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப் பண்ணுவான் ?'' என கேள்வி எழுப்புகிறார். யோபுவை அவர் விமர்சனம் செய்யும்படி, அந்த இளைஞன் ஒரு வரையறைக் கோடு போடுகிறார் என்பது சந்தேகத்திற்கிடமின்றி உள்ளது. யோபுவுடனோ அல்லது அவருடைய நண்பர்களுடனோ ஒத்துப்போகாமல், தன் நிலைப்பாட்டில் மிதமான வகையில் இருக்க முழுமுயற்சி செய்கிறார். அவர் சர்வவல்ல தேவனின் சார்பில் பேசி, தேவன் இவ்விதமாக கட்டளையிடாவிட்டால், யோபுவுக்கு நேரிட்ட இன்னல்கள் அவர்மேல் வந்திருக்கமுடியாது என்கிறார்.

யோபுவினுடைய அனுபவங்களில் தேவனுடைய கரம் இருந்தது எலிகூவிற்கு தெளிவாக தெரிந்ததுபோல் தோன்றுகிறது. தேவன் அனுமதிக்காவிட்டால் சாத்தானால் இவ்விதமான உபத்திரவங்களை அனுப்பியிருக்கமுடியாது. மனிதனோ அல்லது எந்த படிவரிசையிலுள்ள ஒரு தூதரோ தெய்வீக சித்தத்தை தடைசெய்யமுடியாது. யோபு அல்ல, தேவனே எது செய்யப்படவேண்டும் என்று முடிவெடுக்கும் அதிகாரத்தைப் பெற்றவராவார். வாழ்வின் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் தேவன் ஒருவரே கட்டளையிடுபவராவார். யோபு அவருடைய நண்பர்களைவிட நீதிமானாக இருப்பதை எலிகூ தற்செயலாக காண்பிக்கிறார். மேலும் எல்லாரையும்போல அவரும் அபூரணராக இருந்தாலும், அதினால் அவர் தண்டிக்கப்படவில்லை எனவும் காண்பிக்கிறார்.

**அநேகருக்கு இது ஒரு கடினமான பாடம்** (A DIFFICULT LESSON FOR MANY)

எலிகூவின் கேள்வியிலிருந்து ஒரு கிறிஸ்தவன் நன்றாகவே ஒரு பாடத்தைப் பெறலாம். அவ்வார்த்தைகள் தேவஆவியால் ஏவப்படாத வார்த்தைகளாயினும், அவைகள் ஞானமானவைகளே. அவைகளிலுள்ள சத்தியத்தையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும். எவ்வாறெனில் தேவன் சமாதானத்தையும் அமைதியையும் அளிக்க நோக்கம் கொண்டாரானால், முழு அண்டசராசரமும் அவருடைய சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவதோடு, ஒருவரும் அவற்றை தடைசெய்யமுடியாது. நாம் பிரச்சனைகளையோ, உபத்திரவங்களையோ, அடக்குமுறைகளையோ பெற்றால் நாம் தேவனை நோக்கிப்பார்க்க வேண்டும். தேவனுடைய அனுமதியின்றி இந்த விஷயம் எனக்கு ஏற்பட்டிருக்காது என நாம் கூறவேண்டும். நாம் தெய்வீக விசேஷ பாதுகாப்பின்கீழ் வந்திருக்கிறோம். அவருடைய பிள்ளைகளுக்கு நடக்கிற சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். ''நம்பிக்கை'' என்கிற பாடம் கற்பதும், பின்பு அவற்றை வாழ்வில் பயன்படுத்துவதும் கடினமான பாடங்களுள் ஒன்றாக உள்ளது. அதாவது நம் வாழ்வின் எல்லா அனுபவங்களும் தெய்வீக மேற்பார்வையின்கீழ் உள்ளது எனவும், அவையனைத்தும் நம் உன்னதமான நன்மைக்காகவே நடக்கிறது எனவும் உணர்ந்துகொள்ளும் ''நம்பிக்கை''யாகும். இது தற்பொழுது தேவனுடைய குடும்பத்திற்கேயன்றி உலக ஜனங்களுக்கு அல்ல. ஆனால் படிப்படியாக தேவன் எல்லாவற்றையும் உலக ஜனங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் செய்வார்.

இதனடிப்படையில், தற்போது யாரெல்லாம் அவருடைய பிள்ளைகளாக உள்ளனரோ, அவர்களுக்கு மட்டும் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது. நாம் கடினமான அனுபவத்துக்குள் இருக்கும்போது, நம்பிக்கையோடும் பற்றுறுதியோடும் கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். நம்முடைய பரலோகப்பிதா நாம் அவரில் விசுவாசத்தைப் பயிற்சி செய்யவேண்டுமென விரும்புகிறார். பரிசுத்த பேதுரு கூறும்போது, "இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிறீர்கள்" என்கிறார். ஆகவே "கொஞ்சகாலம் பலவிதமான சோதனைகளில் பாடனுபவிக்கிற நாம், அவற்றில் மிகுந்த களிகூறக்கடவோம். "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிறது உங்கள் விசுவாசம்.." – 1பேதுரு1:5–7.

**அநேகருடைய போலி சமாதானம்**(FALSE PEACE OF MANY)

வேறொரு வழியில் சிலர் அமரிக்கையை பெற்றிருக்கலாம். உலக மனிதரில் அநேகர் ஓரளவு சமாதானத்தை அனுபவிக்கின்றனர், அல்லது கவலைகளிலிருந்து விடுபட்டுள்ளனர். ஆனபொழுதிலும் நாம் அனுபவிக்கும் மாபெரும் சத்தியங்களைக் குறித்து அவர்கள் சாத்தானுடைய வஞ்சகங்களினால் குருட்டுத்தனத்திலும், அறியாமையிலும், மூடநம்பிக்கையிலும், தவறுகளிலும் உள்ளனர். தவறுகள் மற்றும் பொய் என்கிற இருளின் ஆதிக்கத்தினால் குருடாக்கப்பட்டு, தாங்கள் பாதுகாப்பாகவும் சுகமாகவும் இருப்பதாக எண்ணுகின்றனர். உலகத்திலிருந்து தேவனோடு உறவுக்குள் வருகின்றவர்கள் சிலசமயங்களில் இத்தகைய தவறான பாதுகாப்பைக் குறித்து விழிப்புள்ளவர்களாகிறார்கள். பின் அவர்கள் உண்மையான சமாதானத்தையும், இருதயத்தின் இளைப்பாறுதலையும் ஆதாயமாக்கிக்கொள்வர். "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என கர்த்தர் கூறுகிறார். இதைத்தவிர வேறுவகையில் உண்மையான இளைப்பாறுதலை பெறமுடியாது.

கர்த்தருடைய பிள்ளைகள் தேவனுடைய தெய்வீக திட்டத்தை அறிவதன்மூலமும், அவருடைய நீதி இரக்கம் அன்பு போன்றவற்றை அறிவதன்மூலமும் , அவர்கள் மனசமாதானத்தையும் இளைப்பாறுதலையும் பெறுகின்றனர். அதோடுகூட இவரே நம் தேவன் என்கிற ஆசீர்வாதமான உணர்ந்துகொள்ளுதலை அடைவர். இவையனைத்தும் நமக்கு சமாதானம், மனஅமைதி மற்றும் இளைப்பாறுதலைத் தருகின்றன. உலகமானது ஏறக்குறைய அமைதியற்றிருக்கும்போது, தேவனுடைய பிள்ளைகள் உலகம் அறியாத, கொடுக்கவும் எடுக்கவும் முடியாத சமாதானத்தைப் பெற்றிருக்கின்றனர். சோதனைகள் அனைத்தும் முடிவடையும்போது, தம்முடைய பிள்ளைகள் தற்காலத்தில் பட்ட எல்லா உபத்திரவங்களையும் நீக்குவார். அப்போது நாம் இந்த சோதனைகளை பின்னோக்கிப் பார்க்கும்போது அவைகள் கொஞ்சகாலத்துக்கான லேசான உபத்திரவங்களாயிருக்கும் – 2கொரிந் 4:17.

**உண்மைக்கும் பயபக்திக்குமான சோதனைகள்**(TESTS OF LOYALTY AND DEVOTION)

கர்த்தர் நம்மேல் மேகம் போன்ற உபத்திரவங்களை அனுமதிக்கும்போது, நமக்குள் ஏதாகிலும் தவறான காரியங்கள் உள்ளனவா ? என முதலாவது கண்டறிய முற்படவேண்டும். அவைகளே முறையான சிட்சைகளைக் கொண்டுவரும். அப்போது கர்த்தருக்குள் நாம் மகிழ்ச்சியாயிருக்கவேண்டும். ஆனாலும் ஒருவேளை நாம் போதுமானஅளவு கர்த்தரோடு நெருங்காமல் நடந்துவந்திருப்போம். ஆனபோதிலும் யோபுவின் விஷயத்தில் நாம் பார்த்தபிரகாரம், நாம் கர்த்தரோடு நெருங்கி ஜீவிக்காமல் இருந்ததினால் மாத்திரம் இந்த மேகம் போன்ற உபத்திரவங்கள் வருகிறது என்று பொருள்கொள்ள அவசியமில்லை.

அதுபோலவே, சிலுவை மரணத்திற்கு முந்தைய இரவில் கெத்சமனே தோட்டத்தில் நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் அனுபவங்களை நாம் நினைவுகூறவேண்டும். தம்முடைய சீஷர்களாகிய பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானிடம், "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கம் கொண்டிருக்கிறது என்றாரே. தேவன் அவருக்கு அமைதியைத் தராமல், பெருவெள்ளம்போல் துன்பம்அவருடைய ஆத்துமாவின்மேல் பெருகும்படி அனுமதித்தார். தேவனுடைய ஆதரவைத் தக்க வைத்துக்கொள்ளும் விதமாக, அவர் முற்றிலும் உண்மையுள்ளவராக, விசுவாசமும் கீழ்ப்படிதலுமுள்ளவராக இருக்கிறாரா என்று அறியும்படி பல படுகளுக்கு உட்படுத்தப்பட்டார். அப்.பவுலினால் சொல்லப்பட்டபடி நம் கர்த்தராகிய இயேசு, "தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்து கேட்கப்பட்டார். –எபிரே5:7.

தம்முடைய நேசகுமாரன் தமது ஆழ்ந்த வியாகுலத்தில் இருக்கும்போது பிதாவானவர் தம்முடைய தூதரை அவருக்கு ஊழியஞ்செய்ய அனுப்பினார் என காண்கிறோம். அவர் தம்முடைய வாழ்க்கையிலும் நடத்தையிலும் தமக்கு பிரியமானபடி இருந்தார் என பிதாவானவர் தம்முடைய தூதர் மூலம் உறுதியளித்தவுடன் அவர் முற்றிலும் அமைதியானார். அந்த உறுதியானது, தொடர்ந்துவந்த தம்முடைய கடினமான அனுபவங்களிலும் நிலைத்துநிற்க முடிந்தது – அதாவது, ஆலோசனை சங்கத்தின் முன்பாகவும், பிலாத்துவின் முன்பாகவும்

படைவீரர்களின் துன்புறுத்தலிலும், கல்வாரியை நோக்கிய பயணத்திலும், பின்வரக்கூடிய மிக கடினமான சிலுவை மரணத்தின் செயல்முறைக்காக அவரால் உறுதியாக இருக்க முடிந்தது.

கடைசியாக, இயேசு பாவியினுடைய ஸ்தானத்தை எடுக்கநேரிட்டபோது, பிதாவானவர் தம்முடைய தொடர்பை அவருடைய மரணத் தருவாயில் நீக்கினபோது, நமது கர்த்தர் மனதில் அலைக்கழிக்கப்பட்டவரானார். பின் தம்முடைய ஆத்தும வேதனையினால், "என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்" என கதறினார். ஆதாமினுடைய பாவத்திற்கு முழு அபராதத்தொகை செலுத்தும்பொருட்டு தேவனிடமிருந்தும், அவருடைய உறவிலிருந்தும் முற்றிலும் துண்டிக்கப்பட வேண்டிய அனுபவம் அவருக்கு அவசியமாயிருந்தது. இந்த அனுபவம் அவருக்கு கடைசி தருணமாயிருந்தது. தேவனைவிட்டு விலகியிருக்கும் ஒரு பாவியின் நிலைமையை நம் கர்த்தர் உணர்ந்துகொள்வதின் அவசியத்தின்பொருட்டு, பரலோகத்தின் பிதா இதை

அனுமதித்தார்.

கர்த்தருடைய உண்மையான மற்றும் விசுவாசமிக்க பின்னடியார்களும் இதேவிதமான அனுபவத்தை ஒவ்வொரு விஷயத்திலும் பெறவேண்டியது மிகவும் அவசியம் என நாங்கள் கருதவில்லை. நம்முடைய மீட்பரைப்போல் நாம் ஈடுபலியாகவோ அல்லது உலகத்தின் பாவத்தை சுமக்கிறவர்களாகவோ இல்லை. ஆனாலும் சிலபேர் கர்த்தரைப்போன்ற அனுபவங்களை பெறுவது ஆச்சரியமானதல்லவே. சில பரிசுத்தவான்கள் மரிக்கும்போது, "நான் புதிய எருசலேமின் கடினமான வாசல்களுக்குள் நுழைகிறேன் என்றும், மற்ற சிலர் மரிக்கும் தருவாயில், நம் கர்த்தரைப்போன்ற அனுபவங்களுக்குள் சென்று," என்தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" எனக் கதறினர்.

நம்மை நேசிக்கிறவரின் கரங்களில் நம் முழு அனுபவங்களையும் விட்டுவிடுவதோடு திருப்தியடைவோம். அதினால் நாம் உள்ளூர சமாதானம், ஆத்தும இளைப்பாறுதல் மற்றும் அமைதியடைவோம். ஏனெனில் புறம்பான எந்தப் புயலும் நம்மை அணுக அனுமதிக்கப்படவில்லை என்றும், நாம் முறையாக எந்த அனுபவங்களையும் பயன்படுத்தும்போது அவைகள் நீதியாகிய சமாதான பலனைத் தரும் என பரம பிதாவானவர் காண்கிறார் என்பதோடும் மனநிறைவு அடைவோமாக.

**மனுக்குலத்திற்கான திரும்பக் கொடுத்தலின் காலங்கள் காட்சியளிக்கப்பட்டது**

RESTITUTION FOR MANKIND PICTURED

யோபுவின் புத்தகத்தின் கடைசி அதிகாரங்களில் யேகோவா தேவன் தம்முடைய பாதிக்கப்பட்ட ஊழியரை நோக்கி உரைக்கும்போது, அவருடைய அறிவீனமான துணிச்சலை கடிந்துகொள்வதோடு, குறைந்தபட்ச அறிவை பெற்றிருந்து, தேவனை நியாயந்தீர்க்கக்கூடாதென கண்டிக்கிறார். இதை யோபு ஏற்றுக்கொண்டு, தேவனை நம்பி சார்ந்திருப்பதினால் சமாதானத்தை அடைந்தார். இருந்தபோதிலும் யோபுவினுடைய மூன்று நண்பர்களும் மிக கடுமையாக தேவனால் கடிந்துகொள்ளப்பட்டனர். ஆனால் அவர்களும் கர்த்தருடைய கட்டளையின்படி தேவனுக்குக் கீழ்ப்படிந்து யோபுவிடம் சென்று தங்களுக்காக தகனபலிகளையும் செலுத்தினர். பின்பு தேவனுடைய அறிவுரையின்படி யோபு அவர்களுக்காக ஜெபித்தபோது, அவர்களும் தெய்வீக தயவுக்குள் மறுபடியும் வந்தனர். யோபுவின் செழிப்பு அவருக்கு உடனடியாக திரும்பக் கிடைத்தது. அவருடைய நண்பர்கள் மற்றும் செல்வாக்கு மீண்டும் திரும்பக் கிடைத்தன. அவருடைய செல்வம் இரட்டிப்பாக கிடைக்கப்பெற்றது. அவருடைய ஆடு மாடுகள் மற்றும் ஒட்டக மந்தையும் இருமடங்காக திரும்பக் கிடைத்தன. முன்பிருந்த அதே எண்ணிக்கையிலான குமாரரும் குமாரத்திகளும் அவருக்கு திரும்பக் கிடைத்ததுடன், வேதத்தில் குறிப்பிட்டுள்ளபடி "யோபுவின் குமாரத்திகளைப்போல் எந்த ஸ்திரீகளும் சௌந்தரியமாயிருந்ததில்லை".

ஆதாமினால் இழந்துபோன அனைத்தும் கிறிஸ்துவுக்குள்ளாக திரும்பக் கொடுக்கப்படுவதற்கு தேவன் வைத்துள்ள தெய்வீகத் திட்டங்களை ஒருபோதும் அறியாதவர்கள், யோபுவினுடைய வாழ்க்கையின் முடிவில் அவர் பெற்ற பொதுவான திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்களை புரிந்துகொள்ளமுடியாது. புதிய உடன்படிக்கையின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன்மூலம், ஆதாமும் அவருக்குள்ளாக எல்லாவற்றையும் இழந்துபோன அவருடைய சந்ததியும் திரும்பப் பெறுவார்கள்(அப்3:19–21). ஆனால் தேவனுடைய திட்டத்தை அறிந்தவர்கள், யோபுவினுடைய அனுபவங்கள் நிஜமானவைகள் என்பதோடுகூட நிழலாகவும் உள்ளது என்பதை உடனடியாகக் காண்பார்கள். யோபு மனுக்குலத்தை குறிப்பதாக தெரிகிறது. மனிதன் முதலாவதாக தெய்வீக சாயலிலும் ஆதரவிலும் இருந்தபோது, அனைத்தும் அவனுக்கு கீழ்ப்பட்டிருந்தன (சங்8:4–8).

ஆதாமினுடைய பாவத்தினிமித்தமாக சாத்தான் மனுக்குலத்தின்மீது எல்லாக் காரியங்களிலும் ஆதிக்கம் செலுத்தி, அதன் விளைவாக சீரழிவு, வியாதி மற்றும் மரணம் வந்தது. ஆனபொழுதிலும் தேவன் தம்முடைய சிருஷ்டிகளை ஒருபோதும் கைவிடாதவராக, கர்த்தராகிய கிறிஸ்துஇயேசுவுக்குள் எல்லாரிடத்திலும் கிருபையுள்ளவராக தற்போதுகூட காத்திருக்கிறார், ஆமென்.

---

## R 5406

# “இராஜ்ஜியத்தின் உவமைகள்”

# “PARABLES OF THE KINGDOM”

**ஆதார வசனங்கள் : லூக்கா 13:18–30**

**திறவுகோல் வசனம் : மத்தேயு 7:21**

“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை”

இயேசுவின் போதனைகள் எல்லாம் கிட்டத்தட்ட தேவனுடைய இராஜ்ஜியத்தோடு சம்பந்தப்பட்டதாக இருந்தது என்பதை சிலர் மாத்திரம் தெளிவாக கவனித்திருக்கின்றனர். ஏனென்றால் தேவனுடைய இராஜ்ஜியம், சாபத்திலிருந்து மனுக்குலத்தை விடுவிப்பதற்கு வாக்களிக்கப்பட்ட மாபெரும் தெய்வீக பரிகாரமாகவும், விருப்பமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களுக்கு பாவம் மற்றும் மரணநிலையிலிருந்து தூக்கி எடுப்பதுடன் கூடிய ஆசீர்வாதமாகவும், தேவனுடனான இசைவுக்குத் திரும்பி, அவரை நேசிக்கிற அனைவருக்கும் அவர் கொடுக்க விரும்புகிற நித்திய ஜீவனாகவும் இருக்கிறது. இயேசுவின் வருகைக்கு முன் இந்த உலகத்தில் நடந்ததெல்லாம் வெறும் ஆயத்தப் பணியாகவே இருந்தது. முதலாம் வருகைக்கு முன் ஜீவன் மற்றும் அழியாமை வெளிச்சத்திற்குக்கூட கொண்டுவரப்படவில்லை. “கிறிஸ்து ஜீவனையும் அழியாமைமையையும் சுவசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்” என்று நாம் வாசிக்கிறோம். அங்கே வரவிருக்கும் ஆசீர்வாதங்களின் குறிப்புக்கள், ஆலோசனைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் இருந்தது. ஆனால் செய்யப்படும் விதம் போன்றவை வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

இஸ்ரயேலர்களின் அடையாளமான பலிகள் மாபெரும் பாடத்தை கற்றுத்தந்தன. அதாவது, ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பே அந்த மேலான பலிகள் செலுத்தப்படவேண்டும். இஸ்ரயேலர்களின் நிழலான இராஜ்ஜியமானது, மேசியா மாபெரும் இராஜாவாக இருந்து மாபெரும் அதிகாரத்துடன் ஆட்சி செய்வார் என்பதை கற்றுத்தந்தது. ஆனால் தாவீதின் வழியில் வந்த கடைசி இராஜாவாகிய சிதேக்கியா சிங்காசனத்தை இழந்தபோது, கர்த்தர் தீர்க்கதரிசியின் மூலமாக, “அதை கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன். உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்” என்று பிரகடனப்படுத்தினார்–எசே21:25–27.

இயேசுவின் முதலாம் வருகையில் அவருடைய ஊழியமாகிய மனிதர்களின் பாவநிவாரணத்திற்காக அவருடைய தியாகபலி இருந்து, பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து மனிதன் விடுவிக்கப்படவும், தேவனுடைய இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படுவதற்குமான அஸ்திவாரமாக அவசியமாயிருந்தது. ஆனால் நம் மீட்பர் 18 நூற்றாண்டுகளுக்கு முன் மரித்திருந்தாலும், இராஜ்ஜியம் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை. “உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக” என்று இன்னும் நாம் ஜெபித்துக்கொண்டிருக்கிறோம். இருந்தபோதிலும் நம் கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களின் வார்த்தையினால் ஒளியூட்டப்படும்போது, தெய்வீக செயல்திட்டம் நிறுத்தப்படவில்லை என்பதை நாம் காண்கிறோம். கிறிஸ்துவின் மணவாட்டியாக அவருடைய உடன்சுதந்திரர்களாக இராஜ்யத்தில் இருக்கப்போகும் தெரிந்துகொள்ளப்பட்ட சபை, தேடி கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த மாபெரும் வேலை நிறைவேறும்வரை இராஜ்ஜியம் வரமுடியாது. அவருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட சபையின் முழு எண்ணிக்கையும் முதலாம் உயிர்த்தெழுதலில் பூரணப்படுத்தப்பட்ட பிறகு, “இராஜரீக ஆசாரியக்கூட்டமாக” “தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருப்பர்” என்று அவர் வாக்களித்ததைப்போல அவர்கள் அவருடன் ஆளுகை செய்வார்கள்.

நமது மீட்பர் இராஜ்ஜியத்தைக் குறித்து ஏன் அதிகளவில் பிரசங்கிக்கவும், கற்பிக்கவும்வேண்டும் என்பதற்கு தேவனுடைய திட்டத்தின் இந்த சிறப்பம்சங்கள் முற்றிலும் போதுமான காரணங்களைக் கட்டமைக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இருக்காது. தனிநபர்களையோ அல்லது ஒரு கட்டிடத்தையோ வேறுபட்ட கோணங்களில் நாம் புகைப்படங்கள் எடுப்பதுபோல், அல்லது அதே நபரையோ அல்லது பொருளையோ பல்வேறு சமயங்களில் அந்நபர்களது வளர்ச்சிக்கேற்றாற்போல் எடுப்பதுபோல, இராஜ்ஜியத்தை விளக்கிக்கூறும் வெவ்வேறுபட்ட உவமைகள் வெவ்வேறு நிலைப்பாடுகளிலிருந்து பேசப்படுகிறது. அவ்வாறே இராஜ்ஜியத்தைப் பற்றிய சில உவமைகள் அதன் சுதந்தரவாளிகளாக ஆகப்போகிறவர்கள்மீது வரவிருக்கும் துன்புறுத்தல்கள் பற்றி சொல்கிறது. மற்ற உவமைகளோ, அங்கே வளமையின் ஒரு மாபெரும் வெளிப்புற தோற்றம் இருக்கும் என்றும், அதேசமயம் உண்மையான இராஜ்ஜிய வகுப்பார் இன்னும் சிறு மந்தையாகவே இருப்பார்கள் என்றும் கூறுகிறது.

குறைந்தபட்சம் ஒரு உவமையானது, சபை நிறைவடைந்து, கிறிஸ்துவுடன் அவருடைய சிங்காசனத்தில் அமர்ந்தபிறகு இருக்கும் இராஜ்ஜியத்தின் எதிர்காலப் பணியைக்குறித்து சொல்கிறது. இது செம்மறியாடு மற்றும் வெள்ளாடு பற்றின உவமையாயிருக்கிறது. "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்ததூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்போது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரிப்பார்" என்று மத்தேயு 25:31,32ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவைகளின் நிறைவேறுதலின் நேரத்தைக் குறிப்பிடுகிறது.

புறஜாதிகளாகிய உலகத்தைப் பிரித்தெடுத்தல் ஒரு ஆயிரம் வருஷமளவுக்கு தொடரும், கடைசியில் கர்த்தருடைய தயவைப்பெற்ற செம்மறியாட்டை அடையாளங்கண்டு, அவர்களுக்கு திட்டமிட்டிருக்கிற ஆசீர்வாதங்களுக்கு அவர்களை அறிமுகம் செய்கிறதும், பாவம் மற்றும் சாத்தானுக்கு உண்மையில் ஊழியர்களாக இருக்கிற வெள்ளாட்டு வகுப்பாரை அழிக்கிறதுமாக மிகவும் முழுமையான பிரித்தெடுத்தலை ஏற்படுத்தும். இவர்கள் அக்கினியால் அடையாளப்படுத்தபபடுகிற நித்திய தண்டனைக்குள் செல்வார்கள். அவர்கள் உணர்வற்ற நிலையில் (மரணம்)இருந்தாலும், அந்த தண்டனையானது நித்தியத்துக்குமாயிருக்கும். ஏனெனில் "பாவத்தின் சம்பளம் மரணம்", சித்திரவதையல்ல. எனவே நித்திய தண்டனை என்பது மீட்பு இல்லாததாய், எதிர்கால விமோசனம் இல்லாததாயிருக்கிற நித்திய மரணமாயிருக்கும்.

**கடுகு விதை**

இந்தப் பாடத்தில் இராஜ்ஜியத்தைப் பற்றிய இரண்டு எடுத்துக்காட்டுகள் காணப்படுகிறது. ஒன்றில் நம் கர்த்தர் இராஜ்ஜியத்தை கடுகு விதைக்கு ஒப்பிடுகிறார். அவ்விதை ஒரு சிறியதாய் வளர்ச்சியைத் துவங்கி, மிகவும் பெரிய மரமாக மாறியதும், அதன் கிளைகளில் ஆகாயத்துப் பறவைகள் கூடுகட்டினது. மிகுந்த வளமானதாக இருக்கிற சபையின் வெளிப்புற தோற்றத்தினை உருவகப்படமாக காண்பிக்கும் நோக்கில் இவ்வுவமை கூறப்பட்டது. பறவைகளை, வந்து தங்கும்படி அழைக்குமளவு வளமையாயிருந்தது. பறவைகள் – சத்தியத்தின் விதையை எடுத்துப்போடுவதற்கும், சுவிசேஷத்தின் செயல்திட்டத்துக்கு எதிராக செயல்பட தயாராயிருக்கிற பொல்லாங்கனையும் அவனுடைய பிரதிநிதிகளையும் குறிப்பிடுவதாக, இயேசு வேறு இடங்களில் பிரகடனப்படுத்தினார்(மத்13:4,19). வெளிப்படுத்தின விசேஷத்திலும் மாபெரும் போதகர் சபையைப் பற்றி, அது குழப்பம் நிறைந்த பாபிலோனாகவும், அது "அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று" என்றும் சொல்கிறார்(வெளி18:2). இந்த காட்சி பொருத்தமாயிருக்கிறது.

மீண்டுமாக நம் போதகர் தம்முடைய சபையின் அனுபவங்களை கருநிலையிலுள்ள ஒரு இராஜ்ஜியமாக எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார். அவருடைய இரண்டாவது உவமை மூன்று படி மாவில் அது முழுவதும் புளிப்பாகும்வரை கொஞ்சம் புளித்தமாவை மறைத்துவைத்த ஒரு ஸ்திரீயைப் பற்றி சொல்கிறது. இது தேவன் சபைக்கு ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிற ஆவிக்குரிய ஆகாரமாகிய தெய்வீக செய்தி களங்கப்படுவதை அடையாளப்படுத்துகிறது என்ற புரிதலுக்கு வேத மாணவர்கள் வருகிறார்கள். அடையாளமொழியில் ஒரு ஸ்திரீ என்பது சபை அமைப்பை குறிப்பிடுகிறது. அப்படிப்பட்ட ஒரு சபை அமைப்பு தேவகுடும்பத்தின் ஆகாரம் முழுவதும் களங்கப்படும்வரைக்கும் அதில் புளிப்பை கலப்பாள் என்று நம் போதகர் நமக்கு கூறுகிறார். வேதத்தில் புளிப்பு என்பது எப்போதும் கலங்கப்படுதலாகிய பாவத்தின் அடையாளமாக பயன்படுத்தப்படுகிறது என்பது கவனிக்கத்தக்கது. பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசமானது இழக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு, தப்பறையுடன் கலக்கப்படும். இனியும் அது அந்தக் குடும்பத்துக்கு ஊட்டமளிக்காது என்பதை இந்த உவமை காண்பிக்கிறது. பரிசுத்த பவுல் இதே விஷயத்தை உருவகப்படுத்தும்போது, "பிற்காலங்களில் சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்" என்று கூறுகிறார் – 1தீமோத் 4:1.

இந்த தப்பறையான போதனைகள், இன்றைய நாளில், தேவனுடைய ஜனங்களை துன்புறுத்துகிறதாயிருக்கிறது. நம்முடைய தலைகளைவிட நம் இருதயங்கள் மேலானது, இருண்ட யுகங்களின் விசுவாசப்பிரமாணங்கள் முழுவதும் இசைவற்றநிலையில் இருக்கையில், அர்ப்பணிக்கப்பட்டவர்களின் இருதயங்கள் நித்தியமானவருடன் இசைந்து இருக்கிறது. வேத மாணவர்களுக்கு சமீபத்தில் வந்துகொண்டிருக்கிற ஆசீர்வாதங்கள், பெருமளவில் இருண்டயுகங்களில் உருவாக்கப்பட்ட விசுவாசப்பிரமாணங்களிலிருந்து தங்களை முறித்துக்கொண்டு, தேவனுடைய ஏவப்பட்ட எழுத்தாளர்களாகிய – இயேசு, அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் ஆகியவர்களின் போதனைகளுக்கு திரும்புவதன் பலனாக இருக்கிறது. அவர்களுடைய வார்த்தைகள் மாத்திரமே நாம் வலுவூட்டப்படுகிற முறையான ஆகாரத்தைக் கட்டமைக்கிறது. அங்கேயே நாம் போஷாக்கைப் பெறுகிறோம். தேவனடைய மனுஷன்

தேறினவனாக இருக்க அவருடைய வார்த்தைகள் போதுமானதாயிருக்கிறது – 2தீமோத்3:16,17.

சில அன்பார்ந்த கிறிஸ்தவ ஜனங்கள், வெளிப்படையாகவே தவறான கோணத்திலிருந்து காரியங்களைப் பார்த்து, கருநிலையில் தேவனுடைய இராஜ்ஜியமாக இருக்கிற சபைக்கு, அதன் எதிர்கால மகிமைநிறைந்த பரிபூரணநிலையில், தேவன் நிர்ணயித்துள்ள வேலையை இப்போதே செய்வதற்கு சாத்தியம் உண்டு என சிந்திப்பதில் இன்னும் வஞ்சிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள், புறஜாதிகளின் எண்ணிக்கையானது கிறிஸ்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவீதத்தில், ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் இரட்டிப்பாகிறது என்ற உண்மைக்கு தங்கள் கண்களை மூடிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் அடிக்சுவடுகளில் நடக்கிறவர்களாகிய தெரிந்துகொள்ளப்பட்ட சுவிசேஷசபை மொத்தமாக சிறு மந்தையாயிருக்கிறார்கள் –லூக் 12:32 என்ற உண்மையை முழுவதும் புறக்கணித்து, கிறிஸ்தவர்களை நூற்றுக்கணக்கான மில்லியன்களில் கணக்கிட முயற்சிக்கின்றனர்.

**அழைக்கப்பட்டவர்கள் இரட்சிக்கப்பட்டனர்**

புறஜாதிகளின் ஆசீர்வாதமானது, தற்போது வாழ்கின்றவர்களுக்கு மட்டுமல்ல, மாறாக எல்லாக் காலத்திலும் வாழ்ந்த அனைவருக்குமானது. கர்த்தருடைய ஏற்ற சமயத்தில் மேசியாவின் இராஜ்ஜியம் மகிமையான வெற்றியை அடையும். இனி ஒருவன் தன் அயலானையும் நண்பனையும் நோக்கி கர்த்தரை அறிந்துகொள் என்று போதிக்க அவசியமில்லை., எல்லோரும் கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருப்பார்கள். தேவனுடைய மகிமையின் அறிவு முழு உலகத்தையும் நிரப்பியிருக்கும் (ஏசா11:9; எரே31:33,34). எல்லோரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையும்பொருட்டு,“ நீதிமான்களும் அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுந்திருப்பர் என்றும், பிரேதக்குழியில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்க எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்” என்றும் வாக்களித்திருக்கிறார். உண்மையுள்ள சிலர் கனம் மகிமை அழியாமை மற்றும் இராஜ்ஜியத்தின் ஒரு பங்கைப்பெற எழுந்துவருவார்கள். ஒப்புரவாக்கப்படாத அநேகர் தேவனுடைய அன்பு அவர்களிடத்தில் சாட்சியமளிக்கும்படியும், இதனால் அவர்கள் இராஜ்ஜியத்தின் வெகுமதிகள் மற்றும் சிட்சைகளுக்கான வாய்ப்பைப் பெறும்படியும், கல்வாரி சிலுவையில் மீட்டெடுத்த, ஆதாமுக்குள் இழந்துபோனதைத் திரும்பப் பெறுவதற்காக அவர்களுக்கு உதவிசெய்யும்படியும் பின்னர் எழுந்துவருவார்கள்.

சிலர் கர்த்தரிடம், இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலர்தானோ என்று வினவினர் ? அந்தக் கேள்விக்கு இயேசு நேரடி பதில் கொடுக்காததற்கு சந்தேகத்திற்கிடமின்றி இரண்டு காரணங்கள் இருந்தது. (1). பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டிராததால், அவருடைய சீஷர்கள் தேவனுடைய திட்டத்தை முழுவதுமாகப் புரிந்துகொள்வதற்கு தயார்ப்படுத்திக்கொள்ள முடியாமல் இருந்தது. (2) அவளுடைய கர்த்தருக்கொப்பாக இருப்பதற்கான, சபையின் இரட்சிப்பு பற்றிய எல்லா விவரங்களையும் விளக்குவதற்கும், அதன்பின்னர், முதலாம் ஆதாமின் சாயல் மற்றும் ரூபத்தினை அடையும் உலகத்தின் மனித மீட்பு பற்றிய விவரங்களையும் விளக்குவதற்கு அது ஏற்றசமயமாக இருக்கவில்லை. இயேசு அந்த விஷயத்தை தனக்கு செவிகொடுப்பவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பொருந்தச்செய்து, “இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்க (இராஜ்ஜியத்துக்குள்) பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகை தேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்கிறேன். வீட்டெஜமான் எழுந்து கதவைப் பூட்டின பின்பு, நீங்கள் வெளியே நின்று : ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குக் கதவைத் திறக்கவேண்டுமென்று சொல்லிக் கதவை தட்டும்போது, அவர் பிரதியுத்தரமாக : நீங்கள் எவ்விடத்தாரோ, உங்களை அறியேன் என்று உங்களுக்குச் சொல்லுவார்” என்று கூறுகிறார்.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு சபைக்கான பரம அழைப்பின் கதவு பாதியளவு திறந்திருக்கும். இயேசு அவருடைய மாம்சமாகிய – அவருடைய பலியின் திரை மூலமாக ஜீவனுக்கான இந்த புதிய வழியைத் திறந்துவைத்தார்(எபி10:19,20). இந்த வழியில் நுழைவதற்கான வாய்ப்புகள் முதலில் யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஜனங்களில் தகுதி வாய்ந்தவர்களை கண்டறிந்தபிறகு, தேவன் 18 நூற்றாண்டுகளுக்கும் மேலாக, “புறஜாதிகள் மத்தியில் எப்புறமும் அந்த செய்தியை பரவச்செய்து வருகிறார். வெளிப்படையாகவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கூட்டிசேர்த்தல் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது, தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையை நிறைவுசெய்யும் கடைசி நபர் மகிமைக்கு தகுதிபெற்று, எவ்வளவு விரைவில் திரைக்கதவை கடந்துசெல்கிறாரோ, அப்போது அந்தக் கதவு அடைக்கப்படும்.

அந்த நேரத்தில் மகா உபத்திரவக் காலத்தின் மத்தியில், ஆவிக்குரிய சிந்தனையின் மாபெரும் விழிப்புணர்வு உலகத்திற்கு வரும். பின்னர் அநேகர், தாங்கள் அந்த மாபெரும் பரிசை அலட்சியப்படுத்திவிட்டதாகவும், தங்களுடைய குறைவான எல்லாவற்றையும் கையளிக்கவேண்டும் என்ற மலிவான

நிபந்தனையை கொடுத்து, விலையுயர்ந்த முத்தை வாங்குவதற்கு தவறிவிட்டதாகவும் சொல்லத் துவங்குவார்கள். பிறகு இந்த வகுப்பாரின் மத்தியில் ஒரு மாபெரும் புலம்பலும் , கர்த்தாவே, கர்த்தாவே நாங்கள் மணவாட்டி வகுப்பாராக ஆகவில்லையா ? என்ற அழுகையும் இருக்கும். ஆனால் கர்த்தர் அவர்களை மணவாட்டி வகுப்பாராக இருப்பதிலிருந்து ஒதுக்கிவிடுவார். பிறகு அங்கே மாபெரும் துயரம் இருக்கும். அழுகையும் பற்கடிப்பும் தாபரித்திருக்கும். இவைகள் நாம் ஏற்கனவே கற்பனை செய்ததாகிய, நித்திய வேதனை ஸ்தலத்திற்கு உரியவைகளல்ல, மாறாக, பரம அழைப்பின் சிலாக்கியங்களை அறிந்தும் அதை புறக்கணித்த வகுப்பார் மத்தியில், அந்த அழுகையும் பற்கடிப்பும் இந்த பூமியின்மீது வரும் என்று வேதம் விளக்குகிறது.

இந்த விஷயத்தை அவருக்கு செவிமடுப்பவர்களுக்கு கொடுத்து, சுவிசேஷயுக முழுவதும் கேட்கிற அனைவருக்கும் அந்த செய்தி பொருந்தும்படி இன்னும் அனுமதித்திருக்கிறார். அவர்களில் சிலர், அவருடனும், அவருடைய பின்னடியார்களுடனும் நெருங்கிய தொடர்பில் இருக்கிறார்கள் என்றும் நம் கர்த்தர் குறிப்பிடுகிறார். அவர்கள் தேவபக்தியின் தோற்றத்தை உடையவர்களாக, அநேக வல்லமையான காரியங்களை செய்திருக்கிறோம் என்று உரிமை கோருகிறார்கள். எனினும் கர்த்தர் அவர்களை இராஜ்ஜியத்தில் உள்ள சிலாக்கியங்களைப் பெறுவதிலிருந்து ஒதுக்கிவிடுவார். அவர்கள் பூமிக்குரிய இராஜ்ஜியத்தில்கூட பங்குபெறுவதில்லை. அது கடந்த காலத்தில் பரம அழைப்பு திறக்கப்படாததற்கு முன்பு வாழ்ந்து மரித்த முற்பிதாக்களுக்கு(தகுதியடைந்தவர்கள்) கொடுக்கப்படும்.

ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு மற்றும் தீர்க்கதரிசிகள் மற்றும் முற்காலத்தில் விசுவாசமாயிருந்த ஒவ்வொருவரும், மகிமையில் உள்ள கண்ணுக்குத்தெரியாத மேசியா மற்றும் அவருடைய சபையின், கண்ணுக்குத் தெரிகிற பிரதிநிதிகளாக பூமியெங்கிலும் பிரபுக்களாக இருப்பார்கள். இராஜ்ஜியத்தின் சுதந்திரவாளிகள் யூதர்கள் மட்டுமே இருப்பார் என்றுஅல்ல, ஏனெனில் ஒரு தேசமாக யூதர்கள் போதுமான அளவு பரிசுத்தமுடையவர்களாக இருக்கவில்லை. ஏனென்றால் கர்த்தர் பரிசுத்தமுள்ளவர்களை மட்டுமே ஏற்றுக்கொள்ளக்கூடியவர். இராஜ்ஜியத்தின் உடன்சுதந்திரர்களாவதற்கான அழைப்பு புறஜாதிகள் மத்தியில் சென்றபோது, சிலர் கிழக்கு மேற்கு வடக்கு மற்றும் தெற்கிலிருந்து வந்து, இராஜ்ஜியத்தின் பங்கைப் பெறுகிறார்கள். தேவனுடைய தயவில் முதலில் யூதர்கள் இருந்தார்கள், கடைசியாக புறஜாதிகள் இருந்தனர், எனினும் முதலில் சலுகைகள் மற்றும் வாய்ப்புக்களுடன் இருந்த சிலர் தவறிவிட்டனர்.

———————————

**R 5407**

# வேறு எதை யேகோவா உன்னிடம் கேட்கின்றார்?"

# "WHAT DOTH JEHOVAH REQUIRE"

**ஆதார வசனங்கள் : மத்தேயு 7:24–29.**

**"மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல், வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் ?" – மீகா 6:8.**

தேவராஜ்யம் வரவிருக்கின்றது என்ற செய்திக்கு செவிசாய்ப்பது மட்டும் அவர்களுக்குப் போதாது, அந்த இராஜ்யம் உலகிற்கு நிச்சயமான ஆசீர்வாதங்களை கொடுக்கவிருக்கிறது என்பதையும் தம் வார்த்தைகளுக்கு செவிசாய்ப்போர் மனதில் பதியச்செய்ய இயேசு விரும்பினார். அந்த இராஜ்யத்தில் மேசியாவோடேகூட உடன் சுதந்திரராகும்படி இராஜ்யத்தின் வகுப்பார் உலகிலிருந்து அழைக்கப்படவேண்டும் என்று அவர்கள் அறிந்திருப்பது மட்டும் போதாது. தேவன் அவர்களுக்கு வழங்கியிருக்கிற மேலான சிலாக்கியத்தை அவர்கள் அடையவேண்டுமானால், அவர்களது தரப்பில் செயல்பாடு அவசியமானது.

"கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி; நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்" என்று பரிசுத்த யாக்கோபு தம் நிருபத்தில் எழுதியிருக்கிறார்(யாக்2:18). நம் கிரியைகளினால் இராஜ்யத்தை அடைகிறோம் என்பதல்ல, விழுகையினிமித்தம் அபூரணர்களாக இருக்கின்ற நம்மால், தேவன் அங்கீகரிக்கத்தக்கதாக பரிபூரணமான கிரியைகளை செய்ய இயலாதவர்களாயிருக்கிறோம். தேவனிடத்திலும் கர்த்தராகிய இயேசுவினிடத்திலுமான நம் விசுவாசமே, அதனை ஆதாயப்படுத்தும்பொழுது நமக்கு வெற்றியளிக்கும். ஆனால் தங்கள் முழு ஆற்றலைப் பிரயோகித்து பயத்தோடும் நடுக்கத்தோடும் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுபவர்களுக்கே வெற்றி சொந்தமாகும். அப்படிப்பட்டவர்களிடத்திலேயே தேவன் கிரியைசெய்து, கிறிஸ்துவின் மூலமாக அவர்களை ஜெயங்

கொண்டோராகவும், முற்றிலும் ஜெயங்கொண்டோராக மாற்றுகிறார்.

இயேசு ஒரு எடுத்துக்காட்டை அல்லது உவமையை கொடுத்து, அதில்அவரது செய்திக்கு செவிசாய்த்து, அதற்கு கீழ்ப்படிதலை காண்பித்தவர்களை ஞானமுள்ள மனுஷருக்கு ஒப்பாயிருப்பதாக அறிவித்தார். இவன் கற்பாறையின்மேல் தன் வீட்டைக் கட்டுகிறான். பெருமழை அவ்வீட்டின்மீதுபெய்தும், அதின் அஸ்திவாரத்தை அகற்றிப்போட முடியாதிருந்தது. வேறே எதுவும் அதற்கு பாதிப்பு அடையச் செய்யக் கூடாதிருந்தது. வாழ்க்கையில் புயல்கள் வருவது நிச்சயம். ஜீவியத்தில் பெரும் நெருக்கடியாக மரணம் வருவதும் நிச்சயம். கர்த்தருடைய ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டிருந்து, இயேசுவின் அடிச்சுவடுகளில் தங்கள் சிறந்த ஆற்றலை வெளிப்படுத்தி நடந்துகொண்டிருப்பவர்கள், இந்த உபத்திரவங்களின் மத்தியிலும் அமைதலுடனும், நம்பிக்கையுடனும், பாதுகாப்புடனும் இருப்பார்கள். இவர்களுக்கு மரணம் என்பது முதலாம் உயிர்த்தெழுதலின் வல்லமையினால் பூமிக்குரிய நிலைமையிலிருந்து பரத்துக்குரிய நிலைமைக்கு மாற்றமடைதலே ஆகும். ''மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை... ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்'' – 1கொரிந் 15:50,51. இவர்களுடைய விசுவாசமும் பற்றுறுதியும் தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மீது கட்டப்படுவதால், அவர்களை ஒருபோதும் தோல்வியுறச் செய்யாது. இப்படிப்பட்டவர்களுக்கு ஜீவ கிரீடம் வைக்கப்பட்டு, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளில் அதைத் தருவார் – 2தீமோ4:8.

மறுபுறம் இயேசுவின் வார்த்தைகளைக்கேட்ட அநேகர், அவற்றை பாராட்டினாலும், அதில் கொடுக்கப்பட்டுள்ள மகிமை நிறைந்த இராஜ்யத்தின் சிலாக்கியங்களை அடையும் முறையான படிகளை எடுக்கத் தவறினர் என்று அவர் அறிவிக்கிறார். அவர்கள் தேவனிடத்தில் முழுதத்தம் செய்வதில் அல்லது அதை நிறைவேற்றுவதில் இருந்து தடைசெய்யப்படும்பொருட்டு, பரம்பரியம், பழக்கவழக்கம், சிற்றின்பம், சுகபோகம், உலகத்தின்ஆவி போன்றவற்றை அனுமதிப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் உண்மையில் ஒருபோதும் உணர்ந்துகொண்டிராத ராஜ்யத்தின் நம்பிக்கைகளில் ஓரளவு தங்களை உற்சாகப்படுத்திக் கொள்வார்கள். ஏனென்றால் அவர்கள் ஒருபோதும் முறையான படிகளை எடுக்கவில்லை. அவர்கள் முறையான அஸ்திவாரத்தின்மீது தங்கள் விசுவாசத்தைக் கட்டவில்லை, ஒருவேளை அவர்களில் சிலர் நியாயப்பிரமாணத்தின்மேல் கட்டப்பட்டிருந்து கிறிஸ்துவின் புண்ணியம் அருளப்படாமல், தங்களுடைய சொந்த முயற்சிகளால் தங்கள் தேவனுக்கு முன்பாக தகுதியுடையவர்கள் என்று எண்ணியிருக்கக்கூடும். இப்படிப்பட்டவர்கள் பெரும் தவறிழைத்தவர்களாவர். அவரது மரணம் நம் மீட்கும் விலையாக கொடுக்கப்பட்டு, உள்நோக்கமற்ற நம் மீறுதல்களுக்காக நமக்கு பரிந்துபேசுபவராக, மகிமையில் அவர் பிரவேசித்திருக்கிறார்.

அப்படிப்பட்டவர்கள் அனைவருக்கும் நெருக்கடியின் நாள், சோதனையின் நாள் நிச்சயமாக வந்துசேரும். அவர்களுடைய விசுவாசத்தின் கட்டமைப்பு முறையான அஸ்திவாரமின்றி இருப்பதால், அதைவிட்டுவிடுவர். அவர்களுடைய நம்பிக்கைகள் அனைத்தையும் இழந்து துன்பப்படுவார்கள். ஆயினும் நம்மில் எத்தனைபேர்அந்த வகுப்பாராக கருதப்படுகிறார்களோ, அவர்கள் நித்திய ஆக்கினைக்குச் செல்வார்கள் என்று இது குறித்துக்காட்டாது. கிறிஸ்தவ ஜனங்களில் கிட்டத்தட்ட அனைவரும் சந்தேகத்திற்கிடமின்றி, இருண்ட யுகங்களின் விசுவாசப் பிரமாணங்களால் தவறாக வழிநடத்தப்பட்டு, தேவவசனத்தில் இடம்பெற்றிராத அநேக காரியங்களை கற்றிருக்கின்றனர்.

**பரிசுத்த பவுலின் உவமையை ஒப்பிடுதல்**

அப். பவுல் இதுபோன்ற எடுத்துக்காட்டைப் பயன்படுத்தி கூறுகிறார்; ''போடப்பட்டிருக்கிற அஸ்திவாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திவாரத்தைப் போட ஒருவனாலும்கூடாது. அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய்க் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன்''. அவனவனுடைய வெளிப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்கப் பண்ணும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். ஒருவன் அந்த அஸ்திவாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்களாகிய தெய்வீக சத்தியங்களைக் கொண்டு கட்டி, தெய்வீகத் தேவைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் இசைவாக தங்கள் விசுவாசத்தையும் குணாதிசயத்தையும் வளர்க்கிறவர்கள், இந்த யுகமுடிவில் வரவிருக்கும் உபத்திரவத்தின் நாளில் எந்த இழப்பையும் அடையமாட்டார்கள். ஆனால் மனித பாரம்பரியம் மற்றும் தன்னிறைவைக்கொண்டு, மரம் புல் வைக்கோலால் கட்டுபவர்களுடைய முழு விசுவாச அமைப்பும்

எரிந்துபோவதைக் காண்பார்கள். ஏனெனில் அந்நாளின் அக்கினி ஒவ்வொரு மனிதனுடைய வேலைப்பாடு எத்தகையது என்று பரிசோதிக்கும்–1கொரிந்3:1015.

தங்களுடைய விசுவாச அமைப்பு அழிந்துபோவதால், அவர்கள் துன்புற்றாலும் , கிறிஸ்துவின்மேல் கட்டிருப்பார்களானால் அக்கினியில் அகப்பட்டபோதிலும் அவர்கள் இரட்சிப்படைவார்கள். அவரகள் வெளிப்படுத்தல் 7:14–17இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, உபத்திரவத்துக்குள்ளாகும் வகுப்பார் என்ற பதத்தில் சில சமயங்களில் பேசப்பட்டுள்ளனர். "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்". இவர்கள்மேல் பல்வேறு ஆசீர்வாதங்களை வழங்க தேவன் ஆயத்தப்படுத்தியிருக்கிறார். இவர்கள் தங்கள் கீழ்ப்படிதல் , உண்மை, விசுவாசம் இவைகளின் விகிதாச்சாரத்துக்கேற்ப தேவனால்ஆசீர் அடைவர்.

பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கற்களைக்கொண்டு கட்டினவர்கள் என்று அப்போஸ்தலரால் குறிப்பிடப்பட்டோர், சிறுமந்தை வகுப்பாராக, ராஜரீக ஆசாரியக்கூட்டமாக, சிங்காசனத்தில் உட்காருவார்கள். இவர்கள் கிரீடங்களை அணிந்தவர்களாக, ராஜ்யத்தில் இயேசுவோடு உடன்சுதந்திரராயிருப்பர். ஆனால் கற்பாறையின்மேல் முறையான பொருட்களைக் கொண்டு கட்டாதவர்கள், அக்கினியால் காக்கப்பட்டபோதிலும் லேவியருக்கு நிஜமாயிருக்கிற திரள்கூட்டத்து வகுப்பாராவர். இவர்கள் சிங்காசனத்தில் அமர்வதற்கு பதிலாக, சிங்காசனத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு முன்பாக ஊழியக்காரராக இருப்பார்கள். தலையில் கிரீடங்கள் அணிந்திருப்பதற்கு பதிலாக, குருத்தோலைகளை கையில் ஏந்துவதற்கு இவர்களுக்கு அளிக்கப்படும். இது தாழ்ந்தநிலையில் அடைந்த வெற்றியை சுட்டிக்காட்டுகிறது. ஆசாரிய வகுப்பார், தேவனுடைய நிஜமான ஆலயமாக இருப்பர், லேவி வகுப்பாராகிய திரள்கூட்டமோ, தேவனுக்கும் ஆலய வகுப்பாருக்கும் ஊழியம் செய்வர்.

தேவன் தீர்மானித்திருக்கிற இரட்சிப்பு அனைத்தும் இத்துடன் முடிவடைவதில்லை, சுவிசேஷ யுகத்தில் இந்த இரண்டு வகுப்பார் மட்டுமே ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். முற்பிதாக்கள் இரட்சிக்கப்பட்டவர்களின் மற்றொரு வகுப்பாராக, பூமிக்குரிய பூரணத்துக்கு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பூமி முழுவதும் பிரபுக்களாக இருந்து, காணப்படாத பரலோக ராஜ்யத்தின் ஆவிக்குரிய வகுப்பாருக்கு, மகிமைநிறைந்த பிரதிநிதிகளாக இருப்பார்கள். இறுதியில், பூமிக்குரிய குடும்பங்கள் அனைத்தையும் ஆசீர்வதிக்கும் ஆயிரமாண்டு ஆளுகை நடைபெறும் அவ்வேளையில், யார் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்து தங்களை தகுதியுள்ளோராக்குகிறார்களோ, அவர்கள் பாவம் மற்றும் சீரழிவிலிருந்து உயிர்த்தெழுதலில் படிப்படியாக உயர்த்தப்பட்டு, இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின்மூலம் மீட்கப்பட்டு, ஆதாமுக்குள் இழந்துபோன அனைத்தையும் திரும்பப் பெறுவார்கள். மற்றொருபுறம், தேவனையும் அவரது நீதியையும் மனதார எதிர்க்கின்ற புத்திக்கூர்மையுள்ள அனைவரும், குறிப்பிட்ட சில கால வாய்ப்புக்குப்பிறகு, இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். தற்போது நியாயத்தீர்ப்பில் இருக்கின்ற ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட வகுப்பாராகவோ, அல்லது மேசியாவின் 1000வருட ஆளுகையின்போது நியாயந்தீர்க்கப்படும் உலகின் ஜனங்களுக்குள்ளோ, யார் கீழ்ப்படிய மறுக்கிறார்களோ, துன்மார்க்கரான அவர்கள் அனைவரும் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவர்.

**ஜனங்கள் ஆச்சரியப்பட்டனர்**

பரிசுத்தஆவியின் ஆதிக்கத்தினால் ஒளியூட்டப்பட்டாலொழிய ஒருவரும் அவரது வார்த்தைகளை பூரணமாகப் புரிந்துகொள்ள முடியாது என்றாலும், அவர்கள் அபூரணத்தன்மையில், இயேசு பேசின அந்த போதனைகளைக்கேட்டு ஆச்சரியப்பட்டதில் ஐயமேதுமில்லை. இயேசு இன்னும் மகிமையடையாததால், அந்த பரிசுத்தஆவி இன்னும் அவ்வேளையில் அருளப்படாதிருந்தது(யோவா7:39). இயேசுவின் போதனைகள், வேதபாரகர்களின் பலதரப்பட்ட யூகங்கள் மற்றும் யோசனைகளிலிருந்து மாறுபட்டதாகவும், நேர்மறையான தன்மையையும் உடையதாயிருந்தன. அவ்வாறே சத்தியத்தின் விஷயத்திலும் எப்பொழுதும் இருக்கிறது. எங்கு குழப்பமும், தியானம் செய்வதால் பரம்பொருளை அடையலாம் என்ற நம்பிக்கை உள்ளதோ, அங்கே தப்பறையும் அறியாமையும் இருக்கும் என்று நாம் நிச்சயிக்கலாம். இதன் காரணமாக, கிறிஸ்துவைப் பிரசங்கிப்போர் அனைவரும் போதிப்பதற்கு அபிஷேகம் அல்லது நியமனம் பெற்றிருக்கவேண்டியது அவசியமாகிறது. இதனை பரிசுத்தஆவியினால் ஜெனிப்பித்தலின்மூலம்

தேவனால் மட்டுமே தரமுடியும்.

**நமது திறவுகோல் வசனம்**

“மனுஷனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல், வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?” ஆனால் ராஜ்யத்தின் சுதந்தரவாளியாக வேண்டுமானால், ஒருவர் தன்னையே வெறுத்து, தன் சிலுவையை சுமந்துகொண்டு, இயேசுவின் அடிச்சுவடுகளை சுயபலிசெலுத்தி பின்பற்றவேண்டும் என்று இந்த திறவுகோல் வசனத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றும், ஏன் இந்த வித்தியாசம் என ஆரம்பத்தில் ஒருவர் ஒருவேளை கேட்கக்கூடும்.

ஆம் இது உண்மையே; எதைக் கேட்கிறார் என்பது முதலாவதானது. ஆனால் மற்றொன்று அது சிலாக்கியம் ஆகும். தேவன் பலியைக் கேட்பதில்லை. அவர் எதிர்பார்ப்பதெல்லாம் உண்மையையும் கீழ்ப்படிதலையுமே, பலியையல்ல. எது பலியிடப்பட்டாலும் அது தெய்வீகப் பிரமாணத்தின் தேவையைக் காட்டிலும் மிக கூடுதலானது. இயேசுவின் விஷயத்திலும் அவ்வாறே நடந்தது. தெய்வீகப் பிரமாணமானது அவரை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் தேவனை நேசிப்பதும், தன் அயலானை தன்னைப்போல் நேசிக்கவுமான கீழ்ப்படிதலைக் காட்டிலும் அதிகமாக அவரிடத்தில் எதிர்பார்க்கவில்லை. ஆனால் தம் ஜீவனைக் கையளிப்பதைத்தவிர இயேசுவால் நிச்சயமாக இவையனைத்தையும் செய்து முடித்திருக்கமுடியாது. இதன் காரணமாகவே யோர்தானில் இயேசு தம்மை ஒப்புக்கொடுத்தபொழுது, வெறுமனே நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க அல்ல, பிதாவின் சித்தம் செய்வதற்காக தம்மிடமுள்ள அனைத்தையும் மரணபரியந்தம் அர்ப்பணித்தார். நியாயப்பிரமாணத்தில் தேவனுடைய கோரிக்கைக்கும் கூடுதலாக, பிதாவின் சித்தம்செய்ய அவர் பெருமகிழ்ச்சியாயிருந்தார்(எபி10:5–7). அதுபோலவே, அவரோடுகூட மகிமை கனம் சாவாமையை பரலோக நிலைமையில் பெறப்போகிற அவருடைய பின்னடியார்கள் அனைவரிடையேயும் காணப்படவேண்டும்.

யூதர்களுக்கு மீகா தீர்க்கதரிசி எழுதுகையில், நியாயப்பிரமாணத்தின் நிலைப்பாட்டின்படியே அவரது செய்தி கொடுக்கப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தங்களது மிகச்சிறந்த ஆற்றலை வெளிப்படுத்தவேண்டுமென்று யூதர்களை உற்சாகப்படுத்தினார். இருந்தபோதிலும், இயேசுவைத்தவிர, எந்த யூதனாலும் ஒருபோதும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முடியவில்லை என்று நாம் அறிவோம். ஏனென்றால் அவரைத்தவிர மற்ற எல்லோரும் விழுந்துபோனவர்களாக, அபூரணர்களாக இருந்தனர். அவர்மட்டுமே, “பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்” இருந்தார்.

மேசியாவின் ஆயிரவருடஆளுகையின்போது, தேவனால் மோசேயின் மூலமாக யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட இதே பிரமாணம், மேசியாவின்மூலம் முழு உலக மனுக்குலத்திற்கும் கொடுக்கப்படும். அதன் கோரிக்கைகள், நியாயமாய் நடந்து, இரக்கத்தை சிநேகித்து, தேவனோடு மனத்தாழ்மையாய் நடப்பதாகும். யாரையும் பரிபூரணத்துக்கு கொண்டுவருவதைக் குறித்து கவனிக்கும்போது, இப்பிரமாணத்துக்கான இயேசுவின் ஊழியம் வெற்றிகரமாய் அமையப்போகிறது, அதேசமயம் இதற்கான மோசேயின் ஊழியம் தோல்வியுற்றது என்பதற்கான காரணம் என்னவெனில், மேசியாவின் இராஜ்யம் பாவிகளை மன்னிக்கும் அதிகாரம் பெற்றதாயும், அவர்களது அபூரணங்களிலிருந்து வெளியேவர அவர்களுக்கு உதவிசெய்து, ஆதி தகப்பனாகிய ஆதாமின் பூரண நிலையாகிய தேவசாயலுக்கும் தேவரூபத்துக்கும் திரும்பச் செல்வதற்கு ஏதுவாக, முழுமையாக ஆயத்தமாகியிருக்கும்.

இவ்வாறு கல்வாரியில் தம் பலியின் புண்ணியத்தினால் பாவத்தைத் தொலைத்ததன் மூலம் பாவிகளை மன்னிக்கும் சிலாக்கியமும், உரிமையும், பாவிகளை அவர்களது சீரழிவிலிருந்து விடுவிப்பதும் மேசியாவை சார்ந்ததாயிருக்கும். ஜீவனுக்கான உரிமையை கல்வாரியில் தராமல், ஆயிரமாண்டு ஆட்சியில் அதை மனுக்குலத்துக்குத் தர தயாராயிருக்கிறார், மனதார அவரை தள்ளிவிடுவோர் மட்டுமே இரண்டாம் மரணத்தில் அழிவுக்குள்ளாவர்.

நாங்கள் ஏங்கித் தவிக்கிறோம், தவிக்கிறோம்,

உம் மகிமையைக் காண்பதற்கே – அது

பூமியெங்கும் விசாலமாய்ப் பாய்ந்தோடுமே...

பழையதும் முதுமையாய்ப்போன தவறுகள் அனைத்தும்

புதியவை பிறக்க வழிவிட்டு, எல்லை தாண்டி ஓடிப்போம்.

இந்த மகிமையின் உச்சநிலையை எட்ட

சீயோன் நீண்ட நாள் காத்திருப்பதில்லை;

அவள் அரியணை ஏறுதல் விரைவில்நிகழும்,

இதோ அவளது ராஜா வாசலருகே நிற்கிறார்”

–––––––––––––––

R 5413

# “இந்த யுகத்தின் முடிவு ஒரு ஆபத்துக்காலம்”

# “THE END OF THE AGE A PERILOUS TIME”

**“கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும்; மனுஷர்கள் துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும்... இருப்பார்கள்” – 2தீமோத்3:1,4.**

“கடைசி நாட்கள்” அல்லது பிந்தைய நாட்கள், முடிவின் நாட்கள் என்ற சொல்லானது, அநேகர் எதிர்பார்த்திருக்கிறபடி இவ்வுலகின் முடிவைக் குறிப்பிடுவதில்லை. ஆனால் நீதியின் ஆளுகை துவங்கப்படஇருக்கிற இந்த யுக முடிவாகிய தற்காலத்தைக் குறித்தே வேத வசனம் சிறப்பாய் சுட்டிக் காட்டுகின்றது. இந்த அறுவடை நேரத்தில் தற்போது வாழ்ந்துவருவதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

“அறுவடை இந்த யுகத்தின் முடிவு” – மத் 13:39(டயக்லாட் மொழிபெயர்ப்பு). இந்நேரத்தில் உலகம் கிறிஸ்தவமயமாக்கப்பட்டு தேவனிடத்தில் மனம்திரும்புவதற்கு பதிலாக, எதிர்மறையான நிலைமை நடப்பிலிருக்கும் என்று அப்போஸ்தலர் எச்சரிக்கிறார்.

இது பெரும் ஆபத்து நேரமாக இருக்கும். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு அபாயகரமாயிருக்கும், கிறிஸ்துவைப் பின்பற்ற தீர்மானித்து பயணத்தைத் துவங்கினவர்களுக்கு ஆபத்தான நேரமாக இது இருக்கும். ஆயினும் உலகிற்கு அது அதிக ஆபத்தான நேரமாக இருக்காது.

ஆதாமின் தண்டனைத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மட்டுமே தற்போது ஜீவனா அல்லது மரணமா என்ற பரீட்சையில் நிற்கிறார்கள். இவர்களுக்கே கடுமையான பரீட்சைகள் இருக்கும் நேரமாக பரிசுத்த பவுல் விளக்குகிறார். உலகின் முழு நடைமுறையும், எதிர்பார்க்கப்பட்ட உயர்நிலைப்பாட்டிலிருந்து தலைகீழாக புரட்டப்படும். மனிதர்கள் துரோகிகளாவார்கள். எவ்வளவுதூரம் ஒப்பந்தம் அனுகூலமளிக்குமோ, அதுவரை நீடித்திருப்பார்கள். அனுகூலமளிக்காதபோது ஒப்பந்தத்தை நிறைவேற்றிமுடிக்க மாட்டார்கள். அந்நேரத்தில் ஒவ்வொரு மனிதனுடைய கரமும் தன் அயலானுக்கு விரோதமாக உயர்த்தப்பட்டிருக்கும். சுயநலம் கட்டுப்பாடின்றி ஆதிக்கம் செலுத்தும். ஒவ்வொருவரும் பொறுப்புணர்வை அலட்சியப்படுத்தி, தன் சொந்த நலன் எதுவோ அதன்படியே செய்வர். சுயவஞ்சகமும், சுயநலமும், அகம்பாவமும் அங்கே வெளியரங்கமாக நிலவும். மனுஷர் தேவப்பிரியராக இருப்பதைக்காட்டிலும், சுகபோகப் பிரியராய் இருப்பர். இந்த நிலைமை, இந்த யுகத்தின் முடிவுக்காலத்துக்குரிய அடையாளமாயிருக்கும்.

இந்நிலைமை தற்போது வியாபித்திருப்பதை சிந்திக்கின்ற ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஒப்பந்தம் எப்பொழுது நிறைவளிக்காததாய் இருக்கிறதோ, அது திருமண ஒப்பந்தமானாலும், வியாபார ஒப்பந்தமானாலும், திருப்தியற்ற ஒப்பந்ததாரர் அந்த ஒப்பந்தத்தை முறிக்கும் அபாயத்திலுள்ளார். உன்னால் முடிந்தால் அதை காத்துக்கொள்ள என்னை வலுக்கட்டாயப்படுத்து என்ற மனப்பான்மையில், ஒப்பந்தத்தை முறிக்க முடிவெடுத்தவர் எண்ணுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் கொள்கையில் உறுதியாயிருப்பதிலும், உடன்படிக்கைகளில் உண்மையாய் இருப்பதிலும், ஒருவேளை அவர்களுக்கு இவை அனுகூலமற்ற நிலைமையை வருவித்தாலும், தங்கள் வார்த்தையை காத்துக்கொள்வார்கள். இந்த மனப்பான்மை கர்த்தருக்கு பிரியமானது.

**இந்த நிலைமைகள் உலகளாவ பரவியுள்ளது**

அதிகாரிகளுக்கு மரியாதை செலுத்தாத இந்த தலைக்கனத்தின் ஆவி உலகில் எப்புறமும் இருப்பதை நாம் காண்கிறோம். கடந்தகாலங்களில், மேலதிகாரிகளுக்கு அதிகஅளவு மரியாதை செலுத்திவந்தனர் என்பதில் எந்த ஐயமுமில்லை. தற்போது, ஊசலாடும் குண்டு, மறுபக்கத்தில் சாய்ந்திருக்கிறது, அதிகாரத்திலிப்போருக்கு தற்போது மரியாதை தருவதில்லை. தேவனிடத்தில் பயபக்தி குறைவுபட்டதாலேயே இந்நிலைமையை வருவித்துக்கொண்டனர். தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தின்பேரில் விசுவாசமிழந்ததன் தவிர்க்கமுடியாத விளைவே இந்நிலை வரக்காரணம். ஜனங்கள் வேதத்தின்பேரில் விசுவாசம் இழந்ததுபோலவே, அவர்கள் தேவனிடத்திலும் விசுவாசமிழந்தோராகி அதிக சுயநலவாதிகளாக, அதிக சுயசித்தமுள்ளோராக ஆகியிருக்கின்றனர். தவறான போதனை மற்றும் தப்பறையின் மூலமாகவே இந்நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. தேவனே தங்களுடைய விரோதியாயிருந்து, தங்களுக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கத்தோடு செய்வதாக ஜனங்கள் எண்ணுகின்றனர்.

மதவாத நம்பிக்கையில் கேலிக்குரியவைகளாக

கருதப்படுபவைகளை மத விமர்சகர்கள் அகற்றிப்போட தேடிக்கொண்டிருக்கின்றனர். இதன் காரணமாக, வேதத்திலிருந்து விலகி சென்றுகொண்டிருக்கின்றனர். ஆனால் வேதாகமத்தால் அல்ல, விசுவாசப் பிரமாணங்களாலேயே அபத்தங்கள் கொண்டு வந்திருப்பதை வேதமாணவர்கள் காண்கிறார்கள். உலகமோ, தேவனிடத்தில் நம்பிக்கையிழந்து, முன்னெப்போதுமிராத அளவுக்கு இறுமாப்புடையோராகின்றனர். ஆரம்பத்தில் தாங்கிப் பிடித்திருந்த தேவபக்தியின் பயம் அகன்றுபோனதினால் ஒவ்வொன்றையும் சந்தேகத்தோடு நோக்கும் மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறது. புசிப்போம், குடிப்போம், மகிழ்ச்சியாயிருப்போம் என்றுகூறும் மனநிலையில் ஜனங்கள் இருக்கின்றனர். வருங்காலத்தைப்பற்றி ஒருவரும் அறியார்கள், எல்லா பிரசங்கிமார்களும் குழப்பமடைந்துள்ளனர். அனைத்தும் காலங்காலமாகவே இருந்து வந்திருக்கிறது. தற்காலத்தில் நாம் குதூகலமாயிருப்போம், சுகபோகமாயிருப்பதே நம் வாழ்வின் குறிக்கோளாயிருக்கட்டும். இதுவே உலகின் மனப்பான்மையாக இருப்பதாக தோற்றமளிக்கிறது. அவர்கள் தேவப்பிரியராயிருப்பதைக் காட்டிலும் சுகபோகப் பிரியராய் இருக்கின்றனர்.

**அர்ப்பணிப்பு செய்த சிலரிடையே உலகத்தின் ஆவி**

நாம் வாழும் இந்நாட்களின் நிலைமைகள், சபைக்கு கொடிதான காலங்களை உருவாக்கும். சபை தேவஅன்பினால் ஏவப்பட்டு, எப்பொழுதுமிராத அளவுக்கு வழிநடத்தப்பட்டுவருகிறதல்லவா ? என்று எதிர்மாறான கேள்வியை நீங்கள் எழுப்பக்கூடும். இந்த தேவஅன்பு, அபாயத்திலிருந்து அவர்களை அரணாய் நின்று பாதுகாக்கும் அல்லவா ? தேவபிள்ளைகளில் சிலர், அதிகதிகமாக உலகிற்குள் மூழ்குவார்கள் என்று நாம் பதிலுரைக்கிறோம். உலகத்தின்ஆவி அவர்களைச் சுற்றிலும் கடல்அலை போல் எழும்பும். முழு உலகமும் தங்கள் எண்ணங்களிலும் வழிகளிலும், வழிதப்பிச்செல்கிறதை இவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் புரிந்துகொள்வார்கள். இவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டபோதிலும், இப்படிப்பட்ட எல்லோருடைய மனப்பாங்கும் உலகத்தின் சிந்தையை பெறுவதாக இருக்கும்.

இந்த உலகத்தின்ஆவி, சபைக்கு ஓரளவு பாதிப்பை உண்டுபண்ணும் என்று அப்போஸ்தலர் அறிவுறுத்துகிறார். இதன்விளைவாக, கர்த்தருடைய ஜனங்களில் சிலர், இந்நேரத்தில் கர்த்தருடனான உடன்படிக்கையை அலட்சியப்படுத்துவதால், விசேஷ ஆபத்துக்குள் செல்வார்கள். மற்றவர்களோ, அந்த உடன்படிக்கையை நினைவில்கொண்டு, விழித்திருந்து ஜெபித்து, நல்ல முன்னேற்றத்தை அடைவார்கள். கர்த்தரோடு நெருக்கமாக ஜீவிப்பவர்கள், இதன் காரணமாக தங்கள் சிந்தையிலும் இருதயத்திலும் வளர்ச்சியடைவார்கள். ஆனால் இப்படிப்பட்டோர் சிலரே.

திரள்கூட்டத்து வகுப்பாரோ, இன்னும் கர்த்தரிடத்தில் நேசமாயிருந்தாலும், உலகத்தின் ஆவிக்குள் மூழ்குவார்கள். தெய்வீக நிலைப்பாட்டுக்கு மிக நெருக்கமாக ஜீவிப்பவர்கள், ஜெபத்தில் விழிப்பாயிருந்து, தேவவசனத்தைக் கற்பதில் நிலைத்திராவிடில், அவர்களும் இந்த ஆவியால் ஓரளவு ஆபத்துக்குள்ளாவர். மற்ற ஜனங்கள் தங்கள் நேரத்தையும் பணத்தையும் செலவழிக்கும் விதம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சோதனையை வருவிக்கும், இவைகள் உறுதியாக எதிர்க்கப்படவேண்டும்.

**நுட்பமான பரீட்சை**

கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய ஊழியத்திற்கு தாமாக முன்வந்து பிரியத்துடன் கையளிக்கவேண்டும். கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கேற்ப பல்வேறுவழிகளில் ஊழியம் செய்யவும், ஆவிக்குரிய கூட்டங்களை நடத்தவும் அவைகளில் கலந்துகொள்ளவும் செலவிடவேண்டும். அவர்கள் உலகிலிருந்து பிரிந்திருந்து, தனித்தன்மையான ஜீவியம், அதாவது உடன்படிக்கையின் ஜீவியம் ஜீவிக்கவேண்டும். உலகம் தற்போது எட்டுமணிநேரம் வேலைநேரமாக நிர்ணயித்திருக்கிறது. ஆனால் இதற்கு மாறாக, கர்த்தருடைய உண்மையுள்ள ஜனங்களோ16 மணிநேரமாக ஆக்கவேண்டும். ஆனால் தற்கால சூழ்நிலைகள் அனைத்தும் ஆபத்துக்களை உருவாக்கும். உலகம் ஒரு நாளைக்கு வேலைசெய்வதற்கு புத்தியறிவோடு ஒரு குறிப்பிட்ட மணிநேரங்களை செலவழிக்குமானால், அவர்கள் செய்வதுபோலவே நாமும் கர்த்தருடைய ஊழியத்துக்கு அர்ப்பணிப்போமானால், நம் பலியின் உடன்படிக்கை முழுமையாகாது. சரியானவற்றை மட்டுமே செய்யத்தேடுபவர்கள், உலகத்தின் நடைமுறைப்படி, எட்டு மணி நேரத்தையோ அல்லது ஒரு நாளையோ உண்மையாய் செலவழித்தார்களானால், அந்த நிலைப்பாட்டின்படி நியாயந்தீர்க்கப்படுவார்கள். அவர்கள் திரள்கூட்டத்து வகுப்பாரின் இடத்தை மட்டுமே அடையமுடியும். அவர்கள் பலியின் உடன்படிக்கையின் நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை.

ஆனால் சிறுமந்தையோ கர்த்தருக்கு பிரியமாக ஊழியஞ்செய்து, தங்கள் முயற்சிகளை முடிவுக்கு கொண்டுவருவதைப்பற்றி அரிதாகவே அறிந்திருப்பார்கள். தங்கள் சரீரங்கள் முழுமையாக கர்த்தருக்கென்று அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளதை உணர்ந்து, அவைகளை புத்தியறிவோடு மரணத்துக்கு அனுதினமும் ஒப்புக்கொடுப்பார்கள். இந்த ஆபத்துக் காலங்களை கண்ணோக்கும்போது, நம்மில் ஒவ்வொருவரும் தங்களையே வினவிக்கொள்ளவேண்டியது ; நான் எந்த வகுப்பைச் சார்ந்தவன் ? என்பதையே.

————————